புராதன நவீன கதாமஞ்சரி: மலர் 6.

VICRAMORVASI

A TALE IN TAMIL

FOUNDED ON

The Sanskrit Drama

OF

Kali Dasa

விக்ரமோர்வசி

இது

காளிதாச மஹாகவி செய்த

ஸம்ஸ்கிருத நாடகங்களுள் ஒன்றின் கதை.

MADRAS:

PRINTED AT THE VAIJAYANTI PRESS.

1915

அறிக்கை.

இந்நூலின் பதிப்பாசிரியர், இதனைவெளிப்படுத்தும் பாத்தியதையை, முன்பாத்தியதை பெற்றிருந்த 'மதறாஸ் ஸ்கூல்புக் அண்டு வெர்ணகுலர் லிட்டரேச்சர் சொஸைட்டி' யாரிடமிருந்து பெற்றுள்ளனர். ஆதலின் பதிப்பாசிரியர் அனுமதியின்றி இந்நூலை, முழுதுமாயினும் ஒரு பாகத்தையாயினும், இதனின் வேறுபோலக்காட்டி மேலுக்குச் சிறிது மாற்றியாயினும் பிரசுரிப்பார். குற்றவாளிகளாகத் துரைத்தனத்தார் தண்டனைக்குட்படுத்தப்படுவார்கள்.

முகவுரை

இந்த நாடகம் காளிதாச மஹாகவிசெய்த மூன்று நாடகங்களிலொன்று. புரூரவசக்கரவர்த்தி தன் விக்கிரமத்தால் (பராக்கிரமத்தால்) ஊர்வசியை மீட்டுக் கொண்டுவந்த கதையாதலால், இதற்கு "விக்கிரமோர்வசி" என்று பேர்வந்தது.

இந்த நாடகத்தில் 'தங்குறைதீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம், வெங்குறை தீர்கிற்பார் விழுமியோர்' என்கிறபடி, மேலானவர் தமது துன்பத்தையும் பாராமல் தம்மை அடைக்கலம் புகுந்தவர்களை அபயங் கொடுத்து ஆதரிப்பார்களென்றும், தங்களுக்கு என்ன வருத்தம் நேர்ந்தாலும் சரியானவழியிலேயே நடப்பார்களென்றும், நன்றி பாராட்டுங்குணமுள்ளவர்கள் உபகாரிக்கு எதையும் கொடுக்க உடன்படுவார்களென்றும் நல்லபெண்கள் புருஷரிஷ்டத்தை மிஞ்சிநடவார்கள் என்றும் இத்தன்மையான சில நீதிகள் விளங்குகின்றன.

இந்நாடகத்தில் வருகிற ஸ்திரீபுருஷர்களின்

அட்டவணை.

புரூரவன்—இந்தக் கதைக்கு நாயகன்; சந்திரன் பிள்ளையான புதனுக்கு இளையென்பவளிடத்தில் பிறந்தவன்.

ஊர்வசி—தேவதாசிகளிலொருத்தி; இந்தக் கதைக்கு நாயகி.

கேசி—ஊர்வசியைப்பிடித்துக்கொண்டுபோன அரசன்.

சித்திரலேகை—ஊர்வசிக்குத் தோழி.

சித்திராதன்—கந்தருவர்களுக்கு அரசன்; ஊர்வசியைத் தேடிக்கொண்டு வந்தவன்.

விதூஷகன்—எப்போதும் ராஜாவோடுகூடவே அவன் இஷ்டப்படி வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருக்கிறவன்.

நிபுணிகை—ராணியின் தாதிப்பெண்.

சியவனர்—ஊர்வசிமகனுக்குச் சகலவித்தையும் கற்பித்துக்கொடுத்த ஒரு முனிவர்.

சத்தியவதி—அந்தக்குமாரனை வைத்து ஆதரித்தவள்.

ஆயுஸ்ஸ—புரூரவசக்கரவர்த்திக்கு ஊர்வசியினிடத்தில் பிறந்தவன்.

நாரதர்—தேவருஷிகளில் ஒருவர்.

காசியை—புரூரவனுடைய பட்டத்துராணி; காசிராஜன் மகள்

இவர்கள்தாம் முக்கியமானவர்.

வாசற்காப்பான் முதலான அப்பிரதான புருஷர் சிலருமுண்டு.

விக்கிரமோர்வசி

*பிரயாகைக்கரையில் பிரதிஷ்டாநகரம் என்று ஒரு பட்டணமுண்டு. அதில் அனேக சுகுணங்களோடு கூடிய புரூரவன் என்னும் அரசனொருவன் இருந்தான். அவன் ஒருநாள் காலையில் நித்தியகருமங்களை யெல்லாம் முடித்துக்கொண்டுவந்து சிங்காசனத்தி லுட்கார்ந்தான். அப்போது தேவகன்னிகைகள் சிலர் மிகுந்த துக்கத்தோடு "எங்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று பெருங் கூச்சலாய் முறையிட்டுக்கொண்டே அவன் காலில் வந்து வீழ்ந்தார்கள். அந்த அரசன் அதுகண்டு, "நீங்களேன் இவ்வளவு துக்கிக்கிறீர்கள்? உங்களுக்குக் குறை வரவேண்டியதென்ன? திரிலோகாதிபதியான தேவேந்திரன் உங்களுக்கு ஒரு வருத்தமும் உண்டாகாமல் நாலண்டையும் காத்துக்கொண்டிருக்கிறானே; நானும் அவன் காலாலிட்ட வேலையைத் தலையால் நடத்தச் சித்தமாயிருக்கிறேனே, அப்படியிருக்க நீங்களெல்லாம் இவ்வளவு துக்கிப்பது யாது

* யமுனாநதி கங்கையோடு வந்துசேருமிடம்.

காரணமோ அதை எனக்குத் தெளிவாய்த் தெரிவிக்க வேண்டும்" என்று கேட்டான். அதற்கு அவர்கள், "ஓ மகாராஜனே! எங்களுக்கு உயிரினுமுயர்ந்த தோழியான ஊர்வசியானவள் குபேரனிடத்திற்குப் போய்த் திரும்பிவருகையில், நடுவழியில் இரணியபுரத் தாசனுன கேசி என்பவன் அவளையும் அவள் தோழியான சித்திரலேகையையும் பிடித்துக்கொண்டு போய் விட்டான்; அதுமுதல் அவளை விட்டுப் பிரிந்திருக்க மனம் ஒப்பாமல் துக்கசாகரத்தில் அமிழ்ந்திருக்கிறோம். இப்பூமியின்கண் நீர் அசகாயசூரரும் நினைத்தது முடிக்க வல்லவருமாகையால், எங்களைக் கை தூக்கி விடவேண்டும்; நீர் கைவிடும்பக்ஷத்தில் நாங்களெல்லாம் ஒருமிக்க மாளவேண்டுமே தவிர வேறு வழியில்லை" என்று புலம்பினார்கள்.

அதைக் கேட்டவுடன் புரூரவசக்கரவர்த்தி அவர்களைப் பார்த்து, "நீங்கள் இனிப் பயப்படவேண்டுவதில்லை; ஊர்வசி இதோ வருகிறாள், தைரியமாயிருங்கள்" என்று சமாதானஞ்செய்து, "உங்களுக்கு அந்தப் பாதகன் போனவழி தெரியுமோ" என்று கேட்க, அவர்கள், "அவன் வடகீழ்த்திசைநோக்கிச் சென்றான்" என்றனர். புரூரவனும் ஹேமகூடமலைமேல் தன்னை எதிர்பார்த்திருக்கும்படி அவர்களுக்குத் திட்டஞ்செய்து, உடனே 'தேவதத்தம்' என்கிற தன் தேரி லேறிக்கொண்டு ஆகாசமார்க்கமாய் வடகீழ்த் திசை நோக்கிச் சென்று பகைவனைக்கண்டு எதிர்க்க,

அவனுக்கும் இவனுக்கும் சண்டையுண்டாயிற்று. அப்போது அந்தச் சக்கரவர்த்தி, நாம் தாமசமாய் இவனோடு சண்டை செய்துகொண்டிருந்தால் மறுபடியும் அப்பெண்களை உயிரோடு காணமாட்டோமென்று நினைத்து, உடனே வாயவியாஸ்திரத்தைப் பிரயோகிக்க, அது அவ்வசுரனையும் அவன் சேனையையும் சமுத்திரநடுவில் தூக்கி யெறிந்தது.

பின்பு அந்தச் சக்கரவர்த்தி அவர்களிருவரையும் தேரிலேற்றிக்கொண்டு திரும்பிவருகையில், சித்திரலேகையின்மேல் சார்ந்துகொண்டிருந்த ஊர்வசியைப் பார்த்து, "ஏன் பெண்ணரசே, நீ இன்னும் பயப்படுகிறாய்? மகா பலபராக்கிரமசாலியாய்த் தேவேந்திரனொருவனிருக்க, உன்னைப் பிடித்துக்கொண்டுபோன அசுரன் பிழைப்பானோ? கண்ணைத் திறந்து பார்" என்று அவளுக்குத் தேறுதல்சொல்லிச் சித்திரலேகையுடன், "உன்தோழி மிகவும் பயந்துபோனாள்; இதோ பார், அவள் உள்ளம் பதைத்து உடல் குலுங்குகின்றது" என்று சொல்ல, அதைக் கேட்டுச் சித்திரலேகை, ஊர்வசியை நோக்கி, "அம்மா, உன்னைப் பார்த்தால் தேவலோகத்திலிருந்து பழகினவள்போலத் தோன்றவில்லையே; அசுரன் பிடித்துக்கொண்டுபோனாலென்ன? அந்தத் துபரம் நீங்கி எங்நேரமாயிற்று; பயப்படாதே" என்றாள். அதைக் கேட்டு, ஊர்வசி கொஞ்சம் தலையைத் தூக்கினாள். அதுகண்டு புரூரவன், "இப்போதுதான் இவளைப் பிடித்த பயம் விட்டது; ஆதலால் இவள்

சந்திரோதயமாய் இருள்நீங்கிய ராத்திரிபோலவும், புகைநீங்கிய அக்கினி ஜ்வாலைபோலவும், கரையிடிந்து கலங்கிப்போய்ப் பின்பு தெளிந்துவருகிற கங்கைபோலவும் விளங்குகிறாள் பார்" என்று சித்திரலேகையுடன் சொன்னான். அவள் ஊர்வசியைப் பார்த்து, "அம்மா, அசுரர்களெல்லாம் தொலைந்துபோனார்கள், எழுந்திரு" என்றாள். அதுகேட்டு ஊர்வசி கொஞ்சம் நிமிர்ந்து பார்த்து, "நம்மை அசுரன் பிடித்திழுத்துக்கொண்டு போனானே; மறுபடியும் அழைத்துக்கொண்டு வந்தவன் யார்? தேவேந்திரனோ" என்று தோழியைக் கேட்க, அவள், "இந்திரன் அன்று; அவற்குச் சரியான இந்த மகாராஜன்" என்று புரூரவனைக் காட்டிக் கூறினாள். அதைக் கேட்டவுடன் அவனைத் திரும்பிப் பார்த்து, "நமக்கு அசுரர்கள் செய்தது மகோபகாரமாயிற்று; இல்லாவிட்டால் நாம் இவனைக் காண்கிறதேது" என்று மனமகிழ்ந்து, அசுரனால் நேரிட்ட துன்பத்தைக்கூட நினையாமல் அவன்மேல் மோகங்கொண்டு அதே நினைவாயிருந்தாள்.

அப்போது அந்தச் சக்கரவர்த்தி பயந்தெளிந்து அழகோடு விளங்காநின்ற அவளைக் கண்டு, இவள் அந்த *நாராயணமுனிவரிடத்தினின்றும் உண்டானபோது,

---

* ஸ்ரீமந் நாராயணனே நரனாகவும், நாராயணனாகவும் இரண்டு வடிவெடுத்துக் கந்தமாதனமலையில் தவஞ்செய்யக் கண்டு தேவப்பெண்களெல்லாம் அவ்விருவரையும் போய்ப் பரிகாசஞ்செய்ய, அப்போது அவர்களிலொருவரான நாராயணமுனிவர் அவர்களெல்லாம் வெட்கியோடும்படித் தன் தொடையிலிருந்து இவளை உண்டாக்கினார். அதனாலேதான் இவளுக்கு ஊர்வசி என்று பெயர்வந்தது. (ஊரு=தொடை.)

இவளைப் பார்த்து மற்ற தேவலோகத்துப் பெண்களெல்லாம் வெட்கமடைந்தார்கள் என்பது என்ன ஆச்சரியம்! ஆனால் இவளை அந்த நாராயணமுனிவர் படைத்தாரென்பதுமாத்திரம் எனக்கு நம்பிக்கையில்லை. அவருக்கு உலகநடக்கை என்ன தெரியும்? எப்போதும் வேதங்களைப் பாராயணஞ்செய்வதில் அவருக்குச் சரியானவர் வேறொருவருமில்லை என்பதுவேதவிர, இவ்வளவு அழகோடு ஒருபெண்ணைப் படைக்கும்படியான சக்தி அவருக்கு ஏது என்று தன் மனதில் எண்ணிக்கொண்டிருக்கையில், ஊர்வசி சித்திரலேகையைப் பார்த்து, "இப்போது நம் தோழிமார்கள் என்ன செய்கிறார்களோ" வென்ன, அதற்குப் புரூரவன், "துக்கசாகரத்தில் அமிழ்ந்துகிடக்கிறார்கள்; அதென்ன, ஆச்சரியமா! தற்செயலாய் உன்னை ஒருகால் பார்த்தவன் கூட ஒரு நிமிஷகாலம் உன்னைவிட்டுப் பிரிந்திருக்க வருந்துவான் என்றால், எந்நேரமும் கூடஇருப்பவர்கள் எப்படிச் சகிப்பார்கள். அதோ பார்த்தையா உன் தோழிமார்கள் அந்த ஹேமகூடமலையிலிருந்து கிரஹணம் பிடித்துவிட்ட சந்திரனைப்போன்ற உன்முகத்தை எவ்வளவு ஆவலோடு பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று இனிமையாய்ப் பேசிக்கொண்டு அம்மலையிடம் வந்துசேர்ந்தான்.

இதற்குள் அந்தப் புரூரவசக்கரவர்த்தி போனது முதல் ஹேமகூடமலையிலிருந்தவர்களெல்லாம், அவன் தான் நினைத்தகாரியத்தை நிறைவேற்றிக்கொண்டு வரு

வானே, மாட்டானே என்ற சிந்தையுடன் அவன் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களிலொருத்தியான ஸஹஜன்யை என்பவள் தோழிமார்களைப் பார்த்து, "இதோ மான்கொடி பறக்கின்றதேருடன் புரூரவன் வருகிறான். அவன் தான் நினைத்ததை முடியாமல் திரும்புகிறவனல்ல; ஊர்வசியை அழைத்துக்கொண்டுதான் வருகிறான்" என்று சொல்ல, அவர்களும் அதிக சந்தோஷத்துடன் தேரையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அப்போது புரூரவன் அவ்விடத்திற்கு வந்து தேரினின்றும் அவர்களிருவரையும் இறக்கித் தானும் இறங்கினான். ஊர்வசி அங்கிருந்த தன் தோழிமாரைக் கண்டு, "நான் பட்டபாட்டை என்னவென்று சொல்லுவேன். இனி எப்போதாவது ஒருகால் நம் தோழிமார்களைக் காணலாம் என்று மனதிலாவது நினைத்தேனா! இந்த மகாபுருஷனலல்லவா நான் அசுரனிடத்தினின்றும் திரும்பிவரவும் உங்களைப்பார்த்துச் சந்தோஷிக்கவும் நேரிட்டது. இந்த மகோபகாரி இல்லாமற்போனால், அந்தப் பாவி கையில் அகப்பட்டுக் கொண்டு என்னபாடு படுவேனோ" என்று, தான் பட்ட துக்கங்களையெல்லாம் சொல்ல, அதைக்கேட்டு அவர்களும் அவளை வேண்டியபடி சந்தோஷிப்பித்துப் பின்பு புரூரவமகாராஜனைப் பார்த்து, "இவ்வளவு பாடுபட்டு எங்கள் மனக்கவலையைத் தீர்த்த உமக்கு நாங்கள் என்ன பிரதி உபகாரம் செய்யப்போகிறோமென்ன,

அவனும் அதுகேட்டு இந்த விஷயத்தில் நான் செய்தது ஒன்றுமில்லை; எல்லாம் நம் அரசனான புரந்தரன் மகிமையாலேதான் நடந்ததென்றான். இவ்வாறாக அவர்களெல்லாம் அம்மலையில் ஒரு குறையுமின்றிப் பேசிக்கொண்டு மகிழ்ந்திருந்தார்கள்.

இவ்வளவில் நாரதமுனிவர் ஊர்வசியைக் கேசி என்பவன் பிடித்துக்கொண்டு போயினனென்கிற சமாசாரம் கேட்டு அதை தேவேந்திரனுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று தேவலோகத்திற்குச் சென்று, தேவேந்திரனைப் பார்த்து, "உனக்கு எவ்விதத்திலும் மகோபகாரஞ்செய்யத்தக்க ஊர்வசி, கேசி என்னும் அசுரன்கையிற் சிக்கிக்கொண்டு கருடன் கைப்பட்ட பாம்புபோல் தவிக்கிறாள்; நீ அவளைப்பற்றிக் கவலையில்லாமல் உன் காரியத்திலேயே கண்ணாயிருக்கிறாயே" என்று சொல்ல, அதைக் கேட்டவுடனே தேவேந்திரன் கந்தருவகணங்களை வரவழைத்து, "நீங்களனைவரும் போய் நம் ஊர்வசியை விடுவித்துக்கொண்டு வரவேண்டும்" என்று திட்டம்பண்ணினான். அப்படியே அவர்களெல்லாம் அவளைத் தேடிக்கொண்டு போகையில், நடுவழியில் ஊர்வசியைப் புரூரவசக்கரவர்த்தி அழைத்துக்கொண்டுவந்து ஹேமகூட பர்வதத்தில் சகல தேவஸ்திரீகளுடனும் சேர்த்திருக்கிறானென்று *சாரணர்கள் சொன்ன வார்த்தையைக் கேட்டு கந்தருவர்களுக்குத் தலைவனான சித்திரரதன் என்பவன் அம்மலையிடத்திற்கு வந்தான்.

---

* ஓர்வகை தேவகூட்டத்தார்.

அதைக் கண்டு அங்கிருந்த யாவரும் அவனை எதிர்கொண்டு வரவழைத்து முன் நடந்த விசேஷங்களை அவனுக்குத் தெரிவிக்க, அவனும் தான் ஊர்வசியைத் தேடிக்கொண்டு வந்ததும், நடுவில் சாரணர் சொன்ன வார்த்தையைக்கேட்டு அம்மலையிடத்திற்கு வந்ததுமுதலான தன் சங்கதிகளையும் அவர்களுடன் சொல்லிப் பின்பு புரூரவனைப் பார்த்து, "இப்போது நீர் செய்தது நம் அரசனுக்குப் பேருதவி அல்லவா? இவளுக்கு இது மறுபிறப்பே தவிர வேறல்ல; ஆதலால் இப்படியே யாவரும் தேவலோகத்திற்குப் போய் இந்திரனைச் சந்தோஷிப்பித்து, அவரிடத்தினின்றும் வெகுமதி பெற்றுக்கொண்டு வருவதே மேலானது" என்று சொல்ல, அந்தச் சக்கரவர்த்தி, "நான் என்ன உபகாரஞ் செய்தேன். நான் அந்த அசுரனை ஜயித்ததும் தேவராஜன் மகிமைதான். சிங்கத்தின் பிரதித்தொனியைக் கேட்டு யானை இறந்துபோமானால், அது பிரதித்தொனியின் வலிமையோ; ஆனால் இப்போது எனக்கு அவரைக் காணச் சமயமன்று, நான் வந்து வெகுநேரமாயிற்று; இவளைமாத்திரம் அழைத்துக்கொண்டு போய் இவள் யஜமானனிடத்தில் சேர்ப்பிக்கவேண்டும்" என்ன, சித்திரரதனும் நல்லதென்று அவர்களையெல்லாம் அழைத்துக்கொண்டு தேவலோகம் போய்ச்சேர்ந்தான்.

ஊர்வசி மாத்திரம் தான் போகும்போது புரூரவனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு போகவேண்டு

மென்று எண்ணங்கொண்டிருந்தும், அவனைக் கேட்க வெட்கி, அதைச் சித்திரலேகையுடன் சொல்ல, அவளும் அதைப் புரூரவனோடு சொன்னாள். அவன்: "போய் வரலாம், ஆனால் என்னை மறவாமல் இன்னம் ஒருதரம் வந்து காணும்படி வேண்டுகிறேன்" என்ன, ஊர்வசி அவனைவிட்டுப்போக மனமில்லாமலே காலில் முள் தைத்ததாகவும், மரத்தில் துணி சிக்கிக்கொண்டதாகவும் சாக்கிட்டுத் திரும்பித்திரும்பி நடுவழியில் தங்கித் தங்கி அவனையே பார்த்துக்கொண்டு, அவனைவிட்டுப் பிரிந்துபோகிறோமே என்ற துக்கத்துடன் மெல்ல மெல்லத் தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தாள். அவ்விடத்தில் தேவேந்திரன் இந்த சமாசாரங்களை யெல்லாம் கேட்டு வெகு சந்தோஷமடைந்து புரூரவ சக்கரவர்த்தியைப் பலவிதமாய்க் கொண்டாடினான். புரூரவனும், அவர்கள் அம்மலையைவிட்டுப் போனபோது ஊர்வசி போய்விடுகிறாளே, இனி நாம் எப்போது அவளைக் காண்போம் என்று கவலையடைந்து, அவள் போனவழியிலேயே கண்வைத்தவனாய்அவள் மறைந்தபின், இனிமேல் என்னகதி, நம்மிடம் போய்ச் சேர வேண்டியதுதா னென்று, அவளையே நினைத்துக் கொண்டு தன் நகரம்போய்ச் சேர்ந்தான்.

அன்றுமுதல் அந்தச் சக்கரவர்த்தி ஊர்வசியினிடத்திலேயே மனம்புதைந்து உலகசிந்தையே இல்லாமல், இனி நமக்குப் போதுபோக்கு எப்படியென் றேங்கித் தன் தோழனான விதூஷகனைப் பார்த்து: "அப்பா

என் நண்பனே ! நான் அந்தப் பெண்மணியான ஊர்வசி யைப் பார்த்ததுமுதல் எனக்கு அவள் நினைவேதவிர வேறில்லை; என் துக்கம் என்னமாய்த் தீரும்? எனக் கொன்றும் தோன்றவில்லையே; என்ன செய்யலாம்? எங்கே போகலாம்?" என்று கேட்டான். அதற்கு விதூ ஷகன் ஆசியகாரணைகையால், "நாம் இப்போது மடைப் பள்ளிக்குப் போனல் அவ்விடத்திலிருக்கும் இனிய பண்டங்களைப் பார்த்தும் புசித்தும் நம் துக்கத்தைத் தணிக்கலாம்" என்று வேடிக்கையாய்ச் சொல்ல, அது கேட்டுப் புரூரவன், "உனக்கு வேண்டியவைகளெல் லாம் அங்கே நிறைந்திருக்கிறபடியால் நீ அங்கே போகத் தவிக்கிறாய்; நான் எந்நாளும் கிடைப்பதரிதான வஸ்துவின்மேல் ஆசைகொண்டிருக்கிறேனே; அம் மடைப்பள்ளிப் பண்டங்களெல்லாம் என் துக்கத்தை எப்படித் தீர்க்கும்!" என்றான். அதற்கு விதூஷகன், "நீயேன் இவ்வளவு வருந்துகிறாய், அந்த ஊர்வசியும் உன் அழகைப் பார்த்தவள்தானே; ஆதலால் அவள் உனக்குக் கிடைப்பது அரிதாக நான் நினைக்கவில்லை" என்றுசொல்ல, அரசன், "இது எனக்காகச் சொல்லுகிற இச்சகப்பேச்சே தவிர வேறன்று, நீ அவள் அழகைப் பார்த்ததில்லை; அவள் அழகைப் பார்க்கப் பதினாயிரங் கண்கள் இருந்தாலும் போதாவே. பலவாறு சொல்லி என்ன? இவ்வுலகத்தில் அவள் அழகுக்கு உவமையே யில்லை; ஆதலால் நாம் இப்போது ஒருவரும் அறியாமல் எங்கேயாவது ஒரு மூலையிலிருந்தால்தான் பிழைக்க

லாம்; *பிரமதவனத்திற்குப் போவோமா? அதுதான் ஏகாந்தமாயிருக்கிறது" என்றான்.

அப்போது வசந்தகாலமாதலால் அந்தத் தோட்டம் எங்கும் மலர்ந்து மணக்கும் பூக்களும், தளிர்த்துக் காய்த்துத் தழைத்த மரங்களுமா யிருந்தது. அப்படிப்பட்ட காலத்தில் அந்த மகாராஜா தன் தோழனையும் அழைத்துக்கொண்டு அந்தத் தோட்டத்திற்கு வந்தான். அங்கே நாலண்டையும் குளிர்ந்து கந்தத்தோடு மந்தமாருதம் வீசவும், வண்டுகளெல்லாம் மதுவுண்டு மதத்து மதுரமாய் ரீங்காரஞ்செய்யவும், குயில்களெல்லாம் இனிப்பாய் இசைபாடவும் கண்டு, அவன் மனங்கலங்கி, உடலுருகி, விதூஷகனை நோக்கி, "தோழா! நான் பிரமதவனத்திற்குப் போய்த் தாபத்தைத் தணிக்கலாமென்று எண்ணினது எதிராறு நீந்திக் கரைசேரலாமென்று நினைத்ததுபோலாயிற்று. ஒரு நாளும் கிடைக்காத வஸ்துவின்மேல் ஆசைகொண்டு மனஞ்சோருகின்ற எனக்கு இவைகளையெல்லாம் பார்ப்பதனால் என்றைக்காவது சுகமுண்டாகுமா" என்று வாடிநிற்க, விதூஷகன், "நீர் வருத்தப்படவேண்டாம்; அந்தத் தேவகன்னியும் இந்த வசந்தகாலத்தில் உம்மிடத்தில் ஆசை தலைக்கொண்டு உம்மைத் தேடிவருவாளென்று நினைக்கிறேன். அஞ்சாதேயும்; இதோ நாம் விளையாடுகிற கொடிமண்டபமிருக்கின்றது பாரும். இதின்மேல் பூத்திருந்த பூக்களெல்லாம் வண்டுகள்

* இது அவன் வீட்டுத் தோட்டத்தின் பெயர்.

விழுந்து அலைத்ததனால் காம்பற்றுக் கீழே வீழ்ந்து மெத்தைபோல் படிந்திருக்கின்றன. இவ்விடத்தில் உட்கார்ந்து சுகமாயிருக்கலாம் வாரும்" என்றான்.

அதனால் அரசன் தோழனோடு அவ்விடத்தில் போய் உட்கார, விதூஷகன் நாலண்டையிலும் பார்த்து, "இதுதான் உமக்குச் சுகமானவிடம்; இதைச் சுற்றிலும் கொடிகள் எத்தனை அழகாயிருக்கின்றன பார்த்தீரா? இவைகளையெல்லாம் கண்குளிரக் கண்டு விநோதமாயிருக்கலாம்" என்றதைக் கேட்டுப் புரூரவன் பெருமூச்செறிந்து, "நான் என்னசெய்வேன்? நிரம்பப் பூத்துச் செழித்த கொடிகளானாலென்ன? தளிர்விட்டுத் தழைத்த மரங்களானாலென்ன? என் கண்மணியைக் காணாத கண்ணில், எதைப் பார்த்த போதிலும் ஒன்றும் பதியவில்லையே; என் எண்ணம் நிறைவேறும்படியான வழி வேறேதாவது உண்டானால் சொல்" என்று வினவ, விதூஷகன், "முன் அகலிகைமேல் ஆசைகொண்டு தவித்த தேவேந்திரனுக்கு அசுவினீதேவதைகள் அகப்பட்டதுபோல் இப்போது நான் உமது கையில் அகப்பட்டுக்கொண்டேன்; எங்களைப்போல் பித்தர்கள் வேறே யார்" என்று பரிகாசமாய்ச் சொன்னான். அதைக் கேட்டு அந்த ராஜா, "நான் அதற்காகச் சொல்லவில்லை அப்பா, 'ஆபத்துவேளைக்குத் தோழன்' என்பதற்கு ஏற்க, இந்தவேளை நீ என்னைக் கைவிடலாகாதென்றேன்" என: "ஆனால் சற்றே பொறுத்துக் கொண்டிரும்; இதோ ஆலோசித்துச் சொல்லுகிறேன்" என்று ஆலோசித்துக்கொண்டிருந்தான்.

அப்படியிருக்கையில் அந்தப் புரூரவன் ஏதோ ஒரு நற்சகுனத்தைக் கண்டு 'நமக்கு அந்தப் பூர்ணசந்திரன் போன்ற முகமண்டலமுள்ளவள் ஒருபோதும் கிடைக்கமாட்டாளே; அப்படியிருக்க சகுனம் உண்டான காரணமென்ன? ஆனாலும் என்னவோ பார்ப்போம்; அவள் வருவளா' என்று அத்திசையை நோக்கிக்கொண்டிருக்கையில், விதூஷகன், "மகாராஜரே, உமக்கு இப்போது தக்கது வேறொன்றுமில்லை; அவளைப்போலச் சித்திரம் ஒன்றெழுதி அதை விநோதமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கலாம்; இல்லாவிட்டால் அவளையே மனதிலெண்ணிக்கொண்டு படுத்துத் தூங்கி அவள் வருகிறதாயும் போகிறதாயும் கனவுகண்டாவது சுகமடையலாம்" என்று பரிகாசமாய்ச் சொன்னான். அதைக் கேட்டு, "தோழா! நல்ல ஆலோசனை சொன்னாய்; எனக்குத் தூக்கமு முண்டாமா? என் மனமும் உடலும் வெந்து பதைத்துக்கொண்டிருக்கின்றனவே: சித்திரந் தான் என் கையால் எழுத முடியுமா? ஏனெனில் நான் அதை எழுத ஆரம்பிப்பதற்குமுன்னமே என் கண்களில் நீர் ததும்புமே; என்னசெய்வேன்?" என்று அரசன் கூறினான். விதூஷகன், "எனக்குத் தோன்றினது இதுதான்; சொல்லிவிட்டேன்" என்றான். அவனும் கைவிடவே அந்தச் சக்கரவர்த்தி அதிக விசனமடைந்து, 'இனி நாம் என்ன செய்யலாம்; நம்முடைய விசனத்தை அவள் அறியவில்லையோ, அறிந்துதான் அலக்ஷியஞ்செய்திருக்கிறாளோ, ஒன்றுந் தெரியவில்லையே.

எதுவந்தாலும் அனுபவிக்கவேண்டியதுதான், வேறென்ன இருக்கிறது' என்றிப்படியாகப் புலம்பிக்கொண்டிருந்தான்.

இவர்கள் இப்படியிருக்க, முன் ஹேமகூட பர்வதத்தில் புரூரவ மகாராஜனை விட்டுத் தேவலோகத்திற்குப் போன ஊர்வசி கணப்பொழுதுந் தேவலோகத்தில் இருக்கச் சகியாமல் தானும் சித்திரலேகையை அழைத்துக்கொண்டு பிரதிஷ்டாநகரத்திற்குப் போகப் புறப்பட்டாள். அதுகண்டு சித்திரலேகை அவளைப் பார்த்து, "என் உயிர்ப்பாங்கி! வாயைத் திறவாமல் எங்கேயோ போகிறாயே, அது எனக்குத் தெரியக்கூடாதா" என்று கேட்க, தோழி, "முன் நாம் ஹேமகூட மலையைவிட்டுப் போனபோது கிளையொன்று தடுக்கி நான் மெதுவாய் வரப்பார்த்து என்னைப் பரிகாசஞ்செய்தது நினைவில்லையோ" வென்ன, சித்திரலேகை, "ஆனால் அந்தச் சக்கரவர்த்தியினிடம் போகப் புறப்பட்டாயா என்ன?" வென்றாள். அதற்கு ஊர்வசி, "ஆமாம், நம்முடைய காரியத்திற்கு நாமேதான் வெட்கத்தைவிட்டுப் போக வேண்டும்" என்று சொல்ல, "ஆனால் நீ உனக்குமுன் யாரையாவது தூதுசெலுத்தி இருக்கிறையோ?" என்று சித்திரலேகை கேட்டாள். "என் மனதைத்தான் அனுப்பியிருக்கிறே" னென்றாள் ஊர்வசி. பின்பு சித்திரலேகை "நல்லகாரியஞ் செய்தாய்; உன்னை அப்படிச் செய்யச் சொன்னது யாராவது உண்டோ?" என்று வினவ, "மன்மதன்தான்" என்று அவள் விடை கூறினாள்

அதைக் கேட்டு, "ஆனால் இனி வாயை மூடிக்கொள்ள வேண்டுவதுதா"னென்று சித்திரலேகை கூற, ஊர்வசி: "நாம் ஒருவருமில்லாமல் தனியாய்ப் போகிறோமே, முன்போல் யாராவது நம்மைப் பிடித்துக்கொண்டு போவார்களோ என்னவோ, ஒருவர்க்குந் தெரியாமல் போம்படி ஒருவழி காட்டவேண்டு"மென்றாள். சித்திர லேகை: "அடி பேதாய், பயப்படாதே! முன் நமக்கு * தேவகுரு கற்பித்த வித்தையை மறந்துபோனையோ; அதைக்கொண்டு நாம் எங்கேவேண்டுமானாலும் திரியலாம்; தடையொன்று மில்லை" யென்றாள். அதைக் கேட்டு, ஊர்வசி, "ஆம், இப்போ அதெல்லாம் எனக்கு நன்றாய் நினைப்பில் வருகிற" தென்று உரைத்தாள்.

இப்படி இருவரும் பேசிக்கொண்டு ஆகாசமார்க்கமாய் பிரதிஷ்டாநகரம் வந்து சேர்ந்தார்கள். அவ்விடத்தில் ஊர்வசி: "தோழி! இந்தப் பட்டணத்தைப் பார்த்தையா? இது இந்தப் பிரயாகையில் தன்னழகைத் தானே பார்த்துக்கொள்ளுகிறதுபோ லிருக்கிறது. இதோ அந்த மகாராஜாவின் மாளிகையைப் பார், இந்தப் பட்டணத்திற்கு நாயகமணிபோ லிருக்கிறது" என்று அவளுக்குக் காட்டி, பின்பு "இப்போது இவைகளையெல்லாம் சொல்லிக் காரியம் என்ன? நாம் போனால் அவர் நம்மைக் கண்ணெடுத்துப் பார்ப்பரா,

---

* தேவகுரு உபதேசித்ததாவது: அபராஜிதை என்னும் ஒரு சிகாமண்டனவித்தை. அது தெரிந்தவர்கள் ஒருவர்கையிலும் அகப்படமாட்டார்கள். (அபராஜிதை=எந்தவிடத்திலும் தோல்வியடையாதது.)

நம்மிடத்தில் அன்பாயிருப்பாரா, அவர் இப்போது என்ன செய்கிருரோ, அவர் எண்ணம் எப்படிப்பட்டதோ, நந்தனவனம்போன்ற இந்தத் தோட்டத்தில் இறங்கிப் பார்ப்போ" மென்று சொல்லித் தோழியோடு அதனுள் இறங்கினுள். சித்திரலேகை அவ்விடத்தில் அந்த மகாராஜாவின் வடிவழகைக் கண்டு, "என் கண்ணே! இவனைப் பார்த்தாயா? இப்போதான் உதித்த சந்திரன் மப்பு மூடினுற்போல் ஒளிமழுங்கிக் கிடக்கிருனென்ன: ஊர்வசி, ஆமாம், "முன்னே பார்த்ததற்கும் இப்போ பார்க்கிறதற்கும் உருவம் மிகவும் வித்தியாசமாயிருக்கிறது. ஆகிலும் ஒருவர்க்குந் தெரியாமல் * திரஸ்கரணிவித்தையால் நம்மை மறைத்துக் கொண்டு அவரண்டை போயிருந்து என்ன சொல்லுகிருரோ கேட்போ" மென்ருள். அதற்குச் சித்திரலேகை: அப்படியே ஆகட்டுமென்று சொல்ல, இருவரும் அவன் பக்கத்தில் வந்து நின்ருர்கள்.

அவ்விடத்தில் அவன் விதூஷகனேடு விசனமாய்ப் பேசின பேச்சுக்களையெல்லாம் கேட்டுச் சித்திரலேகை: "நீ அப்போபிடித்து அலைந்துபோகிருயே; நீ வரவில்லையென்று அவரும் உன்னைத்தானே வெறுத்துக்கொள்ளுகிருர் பார்த்தையா" வென்று சொல்ல, அதைக்கேட்டு ஊர்வசி: "மெய்தான் நான் செய்தது தப்புத்தான். இப்போதாவது அவர் எதிரில் போவோ

---

* திரஸ்கரணிவித்தை-தாம் ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் தங்களை மறைத்துக்கொள்ளத்தக்க ஒரு மந்திரம்.

மென்றால் மனந்துணியவில்லையே; ஆகையால் எழுத்து மூலமாயாவது அவர் கருத்தை அறிந்துகொள்ள விரும்புகிறேனென்றதற்குச் சித்திரலேகையும் சம்மதிக்க, அப்படியே தன் நகங்களால் ஒரு மரப்பட்டையில் 'நீர் சொல்லுகிறதெல்லாம் சரிதான், நான் கொடுத்துவையாதவள்; ஆனால் உம்மிடத்தில் எனக்கு ஆசையில்லையா? ஒரு திருஷ்டாந்தம் பாரும்: எப்போதும் பாரிஜாதப் பூக்களை மெத்தைபோல் பரப்பி அதின்மேல் புரண்டுகொண்டிருக்கிறேன். இதுவுமல்லாமல் குளிர்ந்த தென்றற்காற்று என் மேல் வீசும்போது நெருப்புப்பொறிகளை வாரி யிறைக்கிறப்போல் இருக்கிறது' என்னும் கருத்துள்ள இரண்டு சுலோகங்களை எழுதி எதிரில் எறிந்தாள். அதைப்பார்த்து விதூஷகன்: "ஓஓ, இதென்ன ஆச்சரியம்! என்னவோ உன்னண்டை அடித்துக்கொண்டு வருகிறதே, பாம்புத்தோல்போ லிருக்கிறது" என்று பிரமித்துச் சொன்னதைப்பார்த்து, அந்த ராஜாவானவன் புன்னகை நகைத்துப், "பாம்புத்தோலன்று, இது ஒரு மரப் பட்டை; யாரோ எழுதிப் போட்டிருக்கிறார்கள்" என்று சொல்ல, அதற்கு அவன்: "உன் விசனத்தைக் கேட்டு அந்த ஊர்வசி இரங்கி, தன் கருத்தை எழுதியனுப்பினாளோ பாரும்" என்ன, ராஜா, 'ஆசைக்களவுண்டோ' என்று சொல்லிக்கொண்டு அதை எடுத்துப் படித்துப் பார்த்துச் சந்தோஷமடைந்து, "நீ சொன்னது சரிதா" னென்றான். விதூஷகன், "ஆனால் அதைக் கேட்கவிரும்புகிறேன்; அதை உரக்கப் படித்துக் காட்டவேண்டு"

மென்று சொல்ல, அப்படியே படித்துக் காட்டினான். அதைக் கேட்ட விதூஷகன், "இதனால் இப்போது உமக்கு ஒரு தேறுதலுண்டாயிற்றல்லவோ" என்ன, புரூரவன், "நீயேன் இதைத் தேறுதலென்று சொல்லுகிறாய்; என்னிடத்தில் பூர்ணமான கியாபகம் வைத்திருக்கிறதாய் அவளே எழுதியிருக்கிறாள். இதைப் பார்க்கிறபோது எனக்கு அவளை நேரில் கண்டால் எவ்வளவு களிப்புண்டாகுமோ, அவ்வளவு உண்டாகிறது. என் விரல்கள் வியர்க்கின்றன; இவற்றால் எழுத்துக்கள் அழிந்துபோம்; ஆனதால் இதை நீ வாங்கி வைத்திரு" என்று அந்தப் பட்டையை அவன் கையில் கொடுத்தான். அவனும் அதை வாங்கிக்கொண்டு, "உனக்கு அவ்வளவு ஆசை காட்டினவள் இன்னும் ஏன் வாயை மூடிக்கொண்டிருக்கிறாள்" என்றான்.

ஊர்வசி அதைக் கேட்டவுடன், "தோழி! நான் திடீரென்று அவர் எதிரில் போவதென்றால் அச்சமாயிருக்கிறது. நான் என் மனதை நிலைப்படுத்திக்கொண்டுவருவதற்குள் நீ முன்னதாய்ப் போய் எனக்குத் தக்கபடி அவரோடு விண்ணப்பஞ் செய்யவேண்டு" மென்று சொல்ல: சித்திரலேகை, அப்படியே ஆகட்டுமென்று அரசனெதிரில் வந்து ஆசீர்வாதஞ்செய்ய, அவனும் அவளை க்ஷேமம் விசாரித்துப் பின்பு "கங்கையைப் பிரிந்த யமுனாநதிபோல், ஊர்வசியை விட்டு நீமாத்திரம் வந்தது எனக்கு அவ்வளவு சந்தோஷமாயிருக்கவில்லை" என்றான்: அதைக்கேட்டு, "மெய்தான்; மேகம் எழும்

பித் தானே மின்னல் மின்னும்" என்று சொல்லிப் பின்னும் அவனைப்பார்த்து: "மகாராஜாவே! முன் அசுரன் கையினின்றும் தன்னைக் காத்ததுபோல், இப்போது காமன் கையினின்றும் காக்கவேண்டுமென்று ஊர்வசி வணங்கி விண்ணப்பஞ் செய்கிறு" ளென்ன, அதற்கு அவன்: "நீ அந்தச் சுந்தரிமாத்திரம் மிக வருந்துகிற தாய்ச் சொல்லுகிறையே, அவளுக்காக நான் படுகிற சங்கடம் உன் கண்ணுக்கு ஏன் புலப்படவில்லை" என்ருன். உடனே சித்திரலேகை, ஊர்வசி! இன்னும் உனக்கு வர மனமில்லையா" என்றழைக்கக்கேட்டு ஊர்வசி, அவள் எதிரில் வந்து, "என்னடி அம்மா சமர்த்தியாயிருக்கிறையே; நான் பராக்காயிருக்கக் கண்டு எனக்குத் தெரியாமல் என்னைத் தனியே விட்டு வரலாமா" வென்று தான் ஒன்றுமறியாதவள்போல நடிக்க, அதுகண்டு சித்திரலேகை, "நீ ஏதாவது அறிவையா; அது கிடக்கட்டும், முன்னே மகாராஜாவை வணங்"கென்ருள். அப்படியே ஊர்வசியும் அவனைக் கும்பிட்டு எதிரே நின்ருள். அப்போது அவன், "போதும் என் கண்மணியே, தேவேந்திரனுக்குச் செய்யவேண்டிய மரியாதை எனக்குச் செய்தையே, இவ்வுலகத்தில் இவ்வளவு பெருமைபெற்றவன் நானொருவனே யல்லாமல் வேறு யாரிருக்கிருர்கள்" என்று சரசமாய்ப் பேசிக்கொண்டிருக்கையில், தேவலோகத்தினின்றும் தேவதூதன் ஒருவன் வந்து: "ஓ, சித்திரலேகையே! ஊர்வசியைச் சித்தமாயிருக்கச்

சொல்; பரதமுனிவர் உங்களுக்குக் கற்பித்திருக்கிற நாட்டியத்தை நீங்கள் ஆடப் பார்க்கும்படி இந்திரன் முதலிய தேவர்களெல்லாம் விருப்பங்கொண் டிருக்கிறார்கள்" என்று சொல்ல யாவருங் காதுகொடுத்துக் கேட்டு, "ஐயோ! இப்போதானா ஆட்டத்துக்கு அவசரம் வரவேண்டும். தேனை உண்ணப்போகுந் தருணத்தில் புலி துரத்தியதுபோலாயிற்றே" என்று விசனப்பட்டார்கள். சித்திரலேகை, ஊர்வசியை நோக்கி: "அம்மா, நீ தூதன் சொன்னதைக் கேட்டையா? மகாராஜாவினிடத்தில் செலவுபெற்றுக்கொள்" என்று சொல்ல, ஊர்வசி: "நான் என்னசெய்வேன், எனக்குக் கேட்க வாயில்லையே" யென்றாள் .அப்போது சித்திரலேகை, புரூரவனைப் பார்த்து: "ஒருவனுக்கு அடிமையாயிருந்தால் அவன் சொன்னபடியெல்லாம் செய்ய வேண்டுவது கடமையல்லவா? இப்போ தேவேந்திரன் இவளை வரும்படி சொல்லியனுப்பினானே, அதை உம்மிடத்து நேராய்ச் சொல்லிச் செலவுபெற அஞ்சுகிறாள். ஆதலால் இவளுக்கு விடை கொடுக்கவேண்டும்" என்ன, புரூரவன், "நான் உங்கள் எஜமானன் நியமனத்தைத் தடுப்பேனா? சுகமாய்ப் போய்வரலாம்; ஆனால் என் நினைவுமாத்திரம் கொஞ்ச மிருக்கவேண்டும்" என்று சொன்னான். ஊர்வசியோ மறுபடியும் பிரிந்து போம்படி நேர்ந்ததேயென்று விசனப்பட்டுக்கொண்டே தோழியுடன் தேவலோகம்போய்ச் சேர்ந்தாள்.

அப்போது அவள் பிரிவை ஆற்றமாட்டாமல், புரூரவன் பெருமூச்சுவிட்டு "பால்பாக்கிய மில்லாதா

னுக்கு விலைப்பாலையும் பூனை குடித்ததாம் என்பது போல், தானாய் வந்ததும் தக்கவில்லையே! நம்முடைய துரதிர்ஷ்டத்தை என்னவென்று சொல்லலாம்" என்று புலம்பிக்கொண்டிருக்கையில், விதூஷகன் என்னவோ சொல்ல வாயெடுத்துப் பின்பு அதை அடக்கி, 'ஓஓ! ஊர்வசி வந்திருந்தபோது அவளையே பார்த்துக் கொண்டு இவன் கொடுத்த பட்டை எங்கேயோ இழந்துவிட்டேனே! இப்போது இவன் கேட்டால் என்ன சொல்லுகிற'தென்று திகிலடைந்தான். அந்தச் சமயத்தில் அந்த ராஜா "என்னவோ சொல்ல வாயெடுத்தையே; அதென்ன" வென்று கேட்க, "அவளுக்கு உன்னிடத்திலேயே மனமுறுதியா யிருக்கிறது, விசனப்படாதே" யென்று சொல்லப்போனேன் என்றான். புரூரவன் "சரிதான், நானும் அப்படியே யோசித்தேன்; அவள் போனபோது அவள் மனதெல்லாம் என்னிடத்திற்றான் இருந்தது; ஆயினும் அவள் உடம்பு அவளுக்குச் சுவாதீனமன்றே. இப்போது அவைகளைச் சொல்லிக் காரியமென்ன? அவள் எழுதியெறிந்த பட்டையைக் கொடு. அதையாவது பார்த்துக்கொண்டு போதுபோக்குகிறேன்" என்று கேட்க, முன்னமே திகிலடைந்து நடுங்கிக்கொண்டிருந்த விதூஷகன்: "ஐயோ! ஊர்வசியோடுகூடவே அதுவும் போய்விட்டதே" என்றான். அதற்கு அரசன், "நீ செய்கிறதெல்லாம் இப்படித்தா" னென்று விதூஷகனைக் கோபித்துக்கொண்டு அதைத் தேடத் தலைப்பட்டான்.

இவர்கள் இப்படியிருக்க, அந்த ராஜாவின் பட்டத்தரசியானவள் 'அரசன் ஏதோ வேறெண்ணங்கொண்டிருக்கிறதாய்ச் சிலகுறிப்புகளாலறிந்து, அதன் உண்மையை அறியவேண்டு' மென்று நிபுணிகை என்னும் தன் தாதிப்பெண்ணை அழைத்து, "நம்முடைய ராஜா இன்றைக்குக் காலையி லெழுந்ததுமுதல் ஒரு மாதிரியாயிருக்கிறார்; அந்த விஷயம் விதூஷகனுக்காலல் சீராய்த் தெரியும். அதை எப்படியாவது அவனிடத்திலிருந்து அறிந்துகொண்டுவா" என்று அவனிடம் அனுப்ப, அவளும் அப்படியே போய், ராஜசிங்காசனத்துக்கருகில் சித்திரக் குரங்குபோல் அசையாமல் உட்கார்ந்திருந்த விதூஷகனைக் கண்டு, நாம் இவனை எப்படி மோசஞ்செய்கிறது? ஆனால் புல்மேல் விழுந்த பனிபோல், இவன் வாயில் ஒன்றும் நிமிஷமாகிலும் நில்லாதே என்றெண்ணி அவனருகிற் போய் வணங்கினாள். அப்போது அவன், நம்முடன் ராஜா சொன்ன சமாசாரத்தை எப்போ வெளியிடப் போகிறோமென்று உதடு துடித்துக்கொண்டிருந்தான். இவளைக் காணவே பதைபதைப்போடு "நீ இவ்வளவுதூரம் வந்ததே" தென்று வினவ: அவளும் "தேவியார் உம்மிடத்துக்குத்தான் அனுப்பினா" ரென்றாள். அதுகேட்டு, "இராணியவர்கள் என்ன உத்தரவு பண்ணுகிறார்கள்" என்றான். நிபுணிகை, "'நீர் என்னிடத்து என்றும் பக்ஷமுள்ளவராயிற்றே, நான் துக்கிக்கக்கண்டு என்னை ஒருநாளும் உபேக்ஷித்ததில்லையே' எனச் சொல்லிவரச்

சொன்னாள்” என்று சொல்ல, விதூஷகன்: “மகாராஜா அந்தவிடத்திலே ஏதாவது விரோதஞ் செய்தாரோ” என்றான். அதற்கு அவள்: “ஆம், யாரை மனதில் எப்போதும் நினைத்துக்கொண்டு அவர் வருந்துகிறாரோ அவள் பெயரைச் சொல்லித் தேவியை அழைத்தா” ரென்ன, விதூஷகன் அதிக சந்தோஷமடைந்து, ‘அவரே இச்செய்தியை வெளியிட்டாரே, நாமேன் ஒளிக்கவேண்டும்’ என்றெண்ணி, “ஊர்வசி என்றழைத்தாரோ? அவளைப் பார்த்ததுமுதல் பித்தம் பிடித்து தேவியாருக்குத் தொந்தரை செய்வதுமல்லாமல் என் பிராணனையும் வாங்குகிறார்” என்றான். அவன் அதைச் சொல்லிவிடவே, நிபுணிகை ‘மெதுவாய் மோசஞ்செய்து சங்கதி தெரிந்துகொண்டோமே’ என்று மனங்களித்து, “ஆமாம், நான் போய் தேவியாருக்கு என்ன சமாசாரஞ் சொல்லுகிற”தென்று கேட்க, “நான் அவர் மோகத்தைத் தணித்தபின் தேவியை வந்து காண்கிறேனென்றதாய்ச் சொல்” என்றான். அவள் அப்படியே தேவியிடத்துக்குப் போய் நடந்த செய்திகளை யெல்லாம் செம்மையாய்ச் சொன்னாள். அதுமுதல் பட்டத்தரசி அடிக்கடி மகாராஜாவின் செய்கைகளையெல்லாம் அறிந்து தனக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நிபுணிகையை அனுப்ப, அப்படியே அவளும் பிரமத வனத்திலிருக்கிற கொடிமண்டபத்தில் ராஜா விதூஷகனோடே விசாரப்பட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்து, அவைகளையெல்லாம் தேவியிடத்து வந்

துசொல்ல, இராணியார் "ஆனால் பார்ப்போம் வா" என்று நிபுணிகையை அழைத்துக்கொண்டு அந்தத் தோட்டத்திற்கு வந்தாள்.

அங்கே அந்த மண்டபத்தில் அவர்கள் உட்கார்ந்திருக்கக் கண்டு, "நிபுணிகாய்! நீ சொன்னது சரிதான்; இதோ அந்தப் பிரமசாரியும் அவரும் உட்காந்திருக்கிறார்கள். நாம் இந்த மரத்து மறைவில் ஒளித்துக்கொண்டிருந்தால் அவர்கள் சொல்லுகிறதெல்லாம் நன்றாய்க் கேட்கும்; அங்கே போயிருந்து நீ சொன்னதெல்லாம் மெய்யா பொய்யா பார்ப்போ" மென, இருவரும் அப்படியே அம்மரத்து மறைவில் போய் நின்றார்கள். அப்போது அரசன் தேடிக்கொண்டிருந்த அந்தப் பட்டை காற்றிலடித்துக்கொண்டு வந்து அரசி காலண்டை வீழ, அதைக்கண்டு, நிபுணிகை! "இதென்ன கந்தைத் துணியா பார்" என்று சொல்ல, அவள் அதை நிதானித்து "கந்தையன்று, எழுதுகிற பட்டை; காற்றிலசைந்து திரும்பும்போது எழுத்துக்களெல்லாம் தெரிகின்றன" என்று சொல்லி, அதை எடுத்து "இதைப் படிக்கலாமோ" வென்று கேட்டாள். தேவியானவள், "நீயே படித்துப்பார்; கெடுதி ஒன்றும் இல்லாவிட்டால் அப்புறம் நான் கேட்கிறேன்" என்று சொன்னாள். அப்படியே நிபுணிகை அதைப் படித்துப்பார்த்து, "நம் அரசனைக் குறித்து அந்த ஊர்வசி எழுதியதுபோலிருக்கிற" தென்ன: "ஆனால் எதோ படி பார்ப்போம்" என்று ஆவலோடு தேவி கேட்க, நிபுணிகை அதில்

எழுதியிருந்த இரண்டு பத்தியங்களையும் படித்துக் காட்டினாள். அதுகேட்டுத் தேவி, "பார்த்தையா இதோ மகாராஜாவின் எண்ணம் வெளிப்படையாய்த் தெரிந்துபோயிற்று" என்றாள்.

அப்போது ராஜாவும் விதூஷகனும் அந்த முழுதும் தேடிப்பார்த்தும் அகப்படாமையால், விதூஷகன் இவன் எண்ணத்தை எப்படியாவது மாற்றிவிடவேண்டுமென்று, "என் நண்பனே! இதோ இந்தத் தோட்டத்திற்குப் பக்கத்தில் நீ விளையாடுகிற மலை தெரிகிறது; அங்கே போவோமா" என்று சொல்ல, அதற்கவன் காதுகொடாமலே "நான் அந்தப் பட்டையை வைத்துக்கொண்டு எப்படியாவது போதுபோக்கலாமென்று நினைத்திருந்தேனே, அதை எடுத்துக்கொண்டு போய் நீ என்னவோ செய்துவிட்டாய்; வீணாயேன் திருடிக்கொண்டுபோனாய்? நீயும் முன்னொருதரம் இந்தத் துக்கத்தை அனுபவித்திருக்கிறாய்; ஆதலால் இதன் கொடுமை உனக்கும் தெரிந்திருக்குமே" என்று தென்றலைப் பார்த்து வெறுத்துக்கொண்டு எழுந்திருந்து எதிரில் கிடந்ததை அப் பட்டையென்றெடுக்கப்போனான். அது வாடி ஒளிமழுங்கிய மயிற்றோகையாயிருந்தது. இவைகளையெல்லாம் கண்டு தேவியானவள் புற்றிலிருந்து பாம்பு புறப்படுவதுபோலப் புறப்பட்டுக் கண்கள் சிவந்து உதடு துடிக்க அவன் எதிரில் வந்து நின்று, "புலம்பினதுபோதும், இதோ ஊர்வசி எழுதியது" என்று அதை அவன் கையிற் கொடுக்கப்போனாள். அது

கண்டு அரசன், திடுக்கிட்டுப் பரபரப்புடன், "ஏன் தேவி! க்ஷேமமா?" என்று அவளை விசாரித்துப் பின்பு தோழனைப்பார்த்து, "அப்பா! இப்போதென்னசெய் யலாம்" என்று ஜாடையாய்க் கேட்க, அவன்: "சொத் தும் கையுமாய் அகப்பட்டுக்கொண்ட திருடனுக்கு வாயேது" என்றான். அவன் அப்படிச் சொல்லிக் கை விடவே, புரூரவன் என்ன செய்வேனென்று பயந்து, திரும்பித் தேவியைப் பார்த்து: "என் காதற்கிளியே! நான் இதைத் தேடவில்லையே" என்ன, தேவி கோபித் துக்கொண்டு சில வார்த்தைகள் சொன்னாள். அது கேட்டு விதூஷகன்: "இவன் இந்தக் கையெழுத்தைப் பார்த்ததுமுதல் ஊர்வசிமேல் மோகம்பிடித்துக்கிடக்கி றான்; அது இன்னம் தெளியவில்லை"யென்று சொல்ல, அரசன்: "அப்பா! உன் குணத்தைக் காட்டுகிறாயே, இல்லாத தோஷத்தை ஏற்றி வெகு வருத்தப்பட்டு என் னைக் குற்றவாளியென்று நிரூபிக்கப் பார்க்கிறையோ" என்று சொன்னதைக்கேட்டு, தேவி அரசனைப்பார்த் துக் கோபத்தோடு, "உன்னிடத்தே ஏதாவது குற்ற முண்டா? இல்லை. என்னைப் பார்க்கப் பிரியமில்லாம லிருக்கிற உன்னெதிரில் வந்துநிற்கிற நானன்றோ குற் றஞ்செய்தவள்" என்று நிட்டூரமாய்ச் சொல்லி, நிபுணி கையை அழைத்துக்கொண்டு சரேலென்று போகப் புறப்பட்டாள். அதுகண்டு அரசன் பின்றொடர்ந்து, "நானொன்றும் அப்படிப்பட்ட குற்றஞ் செய்யவில்லை; அப்படியன்றி நான் செய்தது உனக்குப் பிழையாய்த்

தோன்றினுல் பொறுக்கவேண்டு" மென்று கையெடுத்துக் கும்பிட, அவள் அதையும் சட்டைசெய்யாமல் தோழியோடு தன்னிடம்போய்ச் சேர்ந்தாள்.

அப்போது அங்கே சும்மா நின்றுகொண்டிருந்த ராஜாவைப்பார்த்து விதூஷகன்: "ஏன் இங்கே சும்மா நிற்கிருய், வா; அவள் மழைக்காலத்தாறுபோல் கலக்கந்தெளியாமலே போய்ச் சேர்ந்தாள்" என்று சொல்ல, அதைக்கேட்டு ராஜா திரும்பிப்பார்த்து: "தோழா! அவள் செய்தது தப்பன்று. நமக்குள்ளே விசுவாசமிருந்து நாம் வேண்டினுலன்றோ அவள் மனமிரங்குவாள்" என்று கூற, விதூஷகன்: "உனக்கு இது அனுகூலந்தான். கண்ணேவுக்காரனுக்கு விளக்கிருக்கக் கூடுமா என்ருன். அதற்குப் புரூரவன், "அது அப்படியன்று; எப்படியிருந்தாலும் அவளிடத்தில் மரியாதையே செய்யவேண்டும்; நமக்கு ஊர்வசிமேல் ஆசையிருந்ததனுல் இவளை விட்டுவிடலாமோ; ஆனுல் நான் கும்பிட்டதைக்கூட மீறிக்கொண்டு போனுளே, ஆகலால் நம்மேல் குற்றமில்லை" எனத் தைரியமாயிருக்கிறேனென்று சொல்லி, பின்னும் ஊர்வசியைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தான்.

இதற்குள் வணங்கிக் கும்பிட்ட கணவனை அலக்ஷியஞ்செய்து அந்தப்புரம் போய்ச்சேர்ந்த தேவியானவள் விசனமடைந்து, "பெண்புத்தி பின்புத்தி என்பதற்கேற்ப, அப்போது மானத்தைப் பெரிதாய்ப் பார்த்தோமேதவிர பின்வரும் துன்பத்தைச் சிறிதுஞ் சிந்தி

யாமற்போனேமே"யென்று மனவருத்தமுற்று, "இனி எந்த முகத்தைக்கொண்டு அவரிடத்துக்குப் போகிறது; அப்படித்தான் போனேம் அவர் கண்ணெடுத்துப் பார்ப்பரா? மாட்டாரே. ஆனாலும் *பிரியானுப்பிரஸாதம் என்னும் விரதமிருந்து பார்ப்போ"மென்று அதைக் கைக்கொண்டாள். அந்த நியமத்தை இராத்திரியில் சந்திரன் ரோகிணிநக்ஷத்திரத்தோடு கூடியிருக்கிறபோது நம் பிராணநாதனை உப்பரிகைமேல் வரவழைத்து அவரெதிரிலேயே முடிக்கவேண்டுமென்றெண்ணி, அவரிடத்திற்குத் தன் வாசற்காவலாளனைத் தூதனுப்பினள். அத்தருணத்தில் அந்தச் சக்கரவர்த்தி மாலைவேளையில் செய்யவேண்டிய வைதிகச் சடங்குகளை முடித்துத் தோழனேடுகூட, "எப்படியோ பராக்காயிருந்து பகற்பொழுதெல்லாம் தொலைத்தேன்; ஐயோ! அஸ்தமித்துவிட்டதே, இராப்பொழுது மலையாய்வளருமே, இந்தப் பொழுது எப்படி நீங்கப்போகிறது" என்று மனங்கலங்கிவருகையில், இந்தத் தூதன் அவனண்டை போய், "மகாப்பிரபுவே! இராணியவர்கள் இன்றைக்கு இராத்திரி கொஞ்சநேரம் உப்பரிகைமேல் தாங்கள் விஜயம்பண்ணும்படி கேட்டுக்கொள்ளுகிறு"ளென்று சொல்ல, அரசன்: "அவளிஷ்டப்படி நடக்கச் சித்தமாயிருக்கிறேனெனச் சொல்"லென்று அவனை அனுப்பிவிட்டு: "இதென்ன, உண்மையா

---

* கணவன் கோபித்துக்கொண்டிருந்தால் அது தணியும் பொருட்டுக் கைக்கொள்ளும் விரதம்.

யிருக்குமா, இல்லாவிட்டால் விரதம் என்று சொல்லி ஏதாவது மாறுபாடு செய்கிறுளா" என்று விதூஷகனைக் கேட்டான். அதற்கவன், "இந்த விரதத்தைச் சாக்கிட்டு முன்செய்த குற்றத்தைத் தீர்த்துக்கொள்ளலாமென்று எண்ணியிருப்பதாய் நினைக்கிறே"னென்ன, ராஜா: "ஆம், நீ எண்ணினது சரிதான்; பெண்டுகள் தாங்கள் எவ்வளவு வருந்தினபோதிலும் தங்கள் மானத்தை மேலாய்ப் பார்ப்பார்களேதவிர ஒருவர்க்கு வணங்கார்கள்" என்ருன். இப்படி இருவரும் பேசிக்கொண்டு தங்களைச் சுற்றிலும் தீவட்டிகள் சூழ அந்த உப்பரிகைபோய்ச் சேர்ந்தார்கள். பின்பு சந்திரோதயமானவுடனே சக்கரவர்த்தி, தீவட்டிக்காரர்களைப் பார்த்து: "நிலாப் புறப்பட்டபின், தீவட்டி தேவையில்லை; நீங்களெல்லாரும் போகலாம்" என்று சொல்லி, அவர்களை அனுப்பிவிட்டு விதூஷகனைப் பார்த்து: "நேரமாய்விட்டதே, இன்னும் நிமிஷம்போனல் தேவிவந்து சேருவாளே, இப்போது ஏகாந்தமாயிருக்கிறேமே, கொஞ்ச நாழிகையாவது ஊர்வசியைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்போ" மென்று சொல்ல, விதூஷகன்: "ஏன் அப்போது போனவள் இன்னும் வரவில்லை; ஆனல் உம்மிடத்து அவளுக்கு மிக மனமுருகியிருப்பதனல் இனிக் கொஞ்சநேரங் கழித்தாவது வந்து சேருவாளேதவிர வாாமற் போகமாட்டாள். சற்றே பொறுத்துக்கொண்டிருக்கலாம்" என்று சொன்ஞன். புரூரவன்: "உனக்கென்னப்பா சொல்லாதே;

என் துக்கம் எனக்கன்றே தெரியும். என்னிஷ்டங் கைகூடுகிற தருணத்தில் திடீரென்று அதற்குத் தடை வந்து நேர்ந்ததே! அதை நினைத்துக்கொள்ளுகிற போது என் மனம் உருகிப்போகிறது" என்றிப்படிப் பலவாறு புலம்பிக்கொண்டிருந்தான்.

இது இப்படியிருக்க, நாட்டியமாடும்பொருட்டுத் தேவலோகத்திற்குப் போன ஊர்வசி வேறெண்ணமே இல்லாமல் புரூரவன்மேலேயே கவனமாய் சரஸ்வதி தேவி இயற்றிய இலக்ஷ்மீஸ்வயம்வரம் என்னும் நாடகத்தில் இலக்ஷ்மிவேஷம் பூண்டு யாவரும் இவள் இலக்ஷ்மிதானே என்னும்படி அவ்வளவழகாய் அபிநயித்துக்கொண்டிருக்கையில், வாருணியென்பவளாய் அபிநயஞ்செய்துவந்த மேனகையானவள் ஊர்வசியை அழைத்து, "குழந்தாய்! இவ்விடத்தில் ஸ்ரீ மகாவிஷ்ணு முதலிய தேவதைகளனைவரும் வந்து நிறைந்திருக்கிறார்கள்; இவர்களெல்லாரும் மூன்று லோகங்களையும் இஷ்டப்படி செய்ய வல்லமையுடையவர்கள்; உனக்கு இஷ்டமானவரைப் பர்த்தாவாக வரித்துக்கொள்ளலாம்" என்றாள். ஊர்வசி, புருஷோத்தமனான விஷ்ணுவை வரிக்கவேண்டியிருக்க அப்படிச் செய்யாமல் புரூரவசக்கரவர்த்தியை வரிப்பதாய்ச் சொன்னாள். அதைக் கேட்டு அவர்களுக்குக் குருவான பரதமுனிவர், "நீ எவனையோ மனதில் நினைத்துக்கொண்டு நான் கற்பித்த வித்தையைக் கெடுத்துவிட்டதனால், இனி ஒரு நாளும் உனக்குத் தேவலோகத்தில் உணவும் வாசமும் கிடைக்

காமற் போகக்கடவன" என்று சபித்தார். அதுகேட்டு வெட்கித் தலைவணங்கியிருந்த ஊர்வசியைப்பார்த்து தேவேந்திரன் "அந்தப் புரூரவ சக்கரவர்த்தியினால் நமக்கு நேரிடுகிற சகாயம் கணக்குவழக்கில்லை. ஆத லால் அவருக்குச் சந்தோஷம் பண்ணுவிக்கவேண்டு வது நமக்குக் கடமைதான்; ஆகையால் உன் இஷ்டப் படி அவரிடத்துக்குப் போய் அவர் உன்னிடத்தில் ஒரு குழந்தையைப் பெற்றுக் கண்டு களிக்கிறவரையில் அவர் மனங்கோணாமல் பொருத்தமாய் வாழ்ந்துகொண் டிருந்து பின்பு நம்மண்டை வந்து சேரக்கடவாய்" என்று அநுக்கிரகித்தான். அதன்பின்பு ஊர்வசி, "இம்முனிவர் நமக்குக் கெடுதிசெய்ய நினைத்தார்; அது நன்மையாய் முடிந்தது" என்று சந்தோஷித்து, உடனே தோழியும் தானும் புறப்பட்டுப் பிரதிஷ்டா நகரம் வந்து சேர்ந்து, அரசன் எங்கே என்னசெய்கி றானோவென்று யோசித்து, உப்பரிகையில் தோழனோடு உலாவிக்கொண்டிருக்கக்கண்டு, அவ்விடம் வந்து ஓரி டத்தில் மறைந்திருந்தாள்.

அப்போது புரூரவன் விதூஷகனைப் பார்த்து, "இந்த இராப்பொழுதுபோலவே என் தாபமும் வளரு கின்றது, என்னசெய்யலாம்" என்ன, விதூஷகன்: "இப்போது குளிர்ச்சியாய் நிலவுகாய்கிறதே, தாப மேன்" என்றான். அரசன்: "அப்பா இந்தத் தாபம் ஊர்வசியாகிய நிலாவாலன்றி இந்த நிலாவால் தணிகிற தல்லவே. அவள் கதையைச் சொல்லிக்கொண்டிருந்

தால் சற்றே பொறுக்கும்படி இருக்கும்” என்று பேசிக் கொண்டிருந்தான். இவ்வாறு புரூரவன் வருந்துவதைக் கண்டு ஊர்வசி அவனெதிரேபோக இருக்கையில், ராஜ பத்தினி அரசனிடம் வந்தாள். அதுகண்டு ஊர்வசியும் சித்திரலேகையும் இதென்னவென்று திகிலடைந்து நின் ருர்கள். புரூரவனும் ‘ ஓ! தேவி வந்து சேர்ந்தாளே, இனி வாயைத்திறக்க வழியில்லை என்று தோழனையும் அடக்கித் தானும் வாயை மூடிக்கொண்டு தேவியை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். அப்போது தேவி, தன் தாதிப்பெண்களோடு விரதத்திற்கு வேண்டியவை களையெல்லாம் எடுத்துக்கொண்டு அரசனிடத்திற்கு வந்து அவனை வணங்கி, “என் பிராணநாதனே! இந்த விரதம் தங்கள் முன்னிலையிலேதான் நிறைவேற வேண் டியிருக்கிறது. ஆதலால் எனக்காகக் கொஞ்சம் வருத் தப்படவேண்டு”மென்று வேண்ட, அவன்: “உனக் காக நான் படுகிறதும் வருத்தமோ; அது எனக்குக் கிடைக்கவேண்டுமே; இதிருக்கட்டும், இந்த விரதத் தின் பேரென்ன” வென்று வினவ: தேவி அதைச் சொல்ல வெட்கித் தன் தோழியான நிபுணிகையைத் திரும்பிப் பார்த்தாள். அவள் “மகாப்பிரபுவே, இதற் குப் பிரியானுப் பிரஸாதம் என்று பெயர்” என்ருள். அதுகேட்டு, “என்னழகியே! ஏன் வீணுய் விரத மிருந்து தாமரை இதழ்போன்ற உடலை உலர்த்துகிருய்? நீ யாருடைய தயையை வேண்டுகிருயோ அவன் நீ கண்ணெடுத்துப் பார்த்தாற் போதுமென்று உன்னடி

மையாய் விழுந்து கிடக்கிறானே" என்றான். அவன் அப்படிச் சொல்லவே, ராஜமஹிஷி புன்னகைப்புடன் மனமகிழ்ந்து இவையெல்லாம் தன்னுடைய விரதத்தின் மகிமைதானென்று நினைத்துத் தான்வந்த காரியத்தைச் சரியாய் நடத்திவிட்டு, பின்பு மகாராஜாவைப் பார்த்து: "வேறேதோ ஒரு ஸ்திரீயினிடத்து ஆசை கொண்டிருப்பதை நான் வேண்டாமென்று தடுக்கவில்லை; பக்ஷபாதமில்லாமல் என்னிடத்திலும் அவ்வளவு நோக்கமுள்ளவரா யிருக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்" என்றாள். அதைக்கேட்ட விதூஷகன்: "தான் பிடித்தது நிறைவேறுமற்போனால் வணங்கி வழிக்குவருவது உலகவழக்கந்தானே; தன்னால் ஒன்றுஞ் சாயவில்லை. 'நீ உன் இஷ்டப்படியிரு' என்று இவனுக்கு உத்தரவுகொடுத்துவிட்டாள்" என்று எண்ணிக்கொண்டு, "அவர் உனக்கு அடிமைதானே" என்றான். புரூரவனும் தன் தேவியைப் பார்த்து; "நான் யாரிடத்திலேயோ மனது வைத்திருப்பதாய் நினைக்கிறாயே; அப்படியொன்றும் எண்ணவேண்டுவதில்லை. நீ என்னை ஒருவர்க்குத் தானமாய்க் கொடுத்துவிட்டாலும் விடலாம்; உன்னைத்தவிர மற்றொருத்தி என்னை மனதினாலும் நினைக்கக்கூடாது" என்றான். அதைக் கேட்டவுடன் அரசி "அதெப்படியானாலுஞ் சரிதான்; நான் நினைத்தபடி என் நியமத்தை முடித்துவிட்டேன்" என்று சொல்லி, தாதிமாரைப் பார்த்து: "ஓ, பெண்களே! வாருங்கள் போவோம்"

என்று பயணப்பட்டதைக் கண்டு, புரூரவன்: "நீ என்னைச் சந்தோஷிப்பிக்கத்தானே வந்தாய்; நீ புறப்பட்டுப் போனால் எனக்குச் சந்தோஷமேது" என்று சொல்ல, அவள்: "என் விரதம் இன்னும் முடியவில்லை; போய்வருகிறேன்" என்று தன்னுடன் வந்தவர்களையும் அழைத்துக்கொண்டு இருப்பிடம்போய்ச் சேர்ந்தாள்.

இவ்வளவுநேரம் இவர்கள் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டு ஊர்வசி பொறுமைகொண்டு, "இவருக்கு மனைவியிடத்து மிகுந்த அன்பிருப்பதை அறிந்தும், என் மனதுமாத்திரம் அவரைவிட்டு நீங்கவில்லையே" என்று சொல்ல, அவள் தோழி: "ஆனாலென்ன, இப்போது நீ நிராசைசெய்து திரும்பிவிடப் போகிறாயோ" என்றாள். இந்தச்சமயத்தில் அந்த மகாராஜன் தன் தோழனைப்பார்த்து: "தேவி நம்மைவிட்டு வெகு தூரம் போய்விட்டாளல்லவா" என்ன, விதூஷகன்: "நீ இட்டது சட்டந்தான்; இனி உன்னைக் கேட்பார் ஒருவருமில்லை; இனி நம்மால் மாளாது என்று நோயாளியை வைத்தியன் கைவிடுவதுபோல, தேவி உன் இஷ்டப்படி விட்டுவிட்டாள்" என்றான். புரூரவன்: "ஆனால் இனி நமக்கொரு தடையுமில்லை; அந்த ஊர்வசி இப்போது வருவாளானால்" என்று சொல்ல, ஊர்வசி மனமகிழ்ந்து, 'இப்போதான் என்னிஷ்டம் நிறைவேறியது' என்று நினைத்துக்கொண்டாள். பின்பு அவன்: "ஊர்வசி என்னெதிரில்கூட வரவேண்டாம்; என் கண்ணுக்குத் தெரியாமல் அவள் காற்சிலம்போ

சையாவது என் செவியுற நடப்பளா, என் பின்னே வந்து தனது செந்தாமரைக் கைகளால் என் கண்களை மூடுவளா, இல்லாவிட்டால் என் கிட்டவரப் பயந்து நிற்பதைக் கண்டு, அவள் தோழியாயினும் அவளைப் பிடித்துத் தள்ளிக்கொண்டு வருவளா" என்று சொல்வதைக் கண்டு, ஊர்வசி: 'இதுதான் நாம் போகவேண்டிய தருணம்' என்று, அவன் பாராமலே பின்புறமாய்ப் போய் அவன் கண்களை மூட, விதூஷகன்: அவளை ஊர்வசி என்று தெரிந்து, "இதென்ன இது, உன் கண்களை யாரோ மூடினாளே" என்று பரிகாசமாய்ப் பேச, அவன் அவளைத் தடவிப்பார்த்து: "அந்த ஊர்வசி தான்" என்றான். பின்பு அவன், "நீ ஊர்வசியென்று எப்படி அறிந்தா"யென்ன: "இவள் கையால் என்னைத் தொடுவதற்கு முன்னமே என் உடம்பு குளிர்ந்து போயிற்றே; இன்னொருத்தியானால் இப்படி இருக்குமோ; சந்திரோதயமானாலன்றி ஆம்பல் மலருமோ" என்று சொல்லி, அவள் கையைப் பிடித்துக்கொண்டே எழுந்திருக்க, ஊர்வசி அவன் எதிரில் வந்து முன்போலவே அவனை 'விஜயீபவ' என்று சொல்லிக்கொண்டு வணங்கினாள்.

பின்பு சித்திரலேகையும் வந்து அவனை க்ஷேமம் வினவி நிற்கையில், ஊர்வசி புரூரவனோடு சொல்ல வெட்கிச் சித்திரலேகையைப் பார்த்து: "இப்போது தான் பட்டத்தரசி எனக்கு உத்தரவு கொடுத்தாள்; வந்து சேர்ந்தேன்; ஆதலால் இதுவரையில் நான்

வாமலிருந்ததைக் குற்றமாய் நினைக்கவேண்டாம்" என்று சொல்ல, புரூரவன்: "இப்போதான் தேவி உத்தரவின்மேல் வந்தாய்; முன் என் மனதைக் கவர்ந்துகொண்டு போனையே, அப்போது உனக்கு உத்தரவு கொடுத்தவரார்" என்று வேடிக்கையாய்ச் சொல்ல, சித்திரலேகை அரசனைநோக்கி: "ஐய, இனி ஒன்றுஞ் சொல்ல வாயில்லை; நான் இந்தக் கோடை காலத்தில் தினந்தோறும் சூரியனைப் பூசிக்கவேண்டு மாதலால் எனக்குச் செலவு கொடுக்கவேண்டும்; அன்றியும் ஒருநாளும் இவள் தேவலோகத்தைக்கூட நினையாமலிருக்கும்படி இவளைப் பாதுகாக்கக் கோருகிறேன்" என்று சொன்னதற்கு, அரசன் "சுவர்க்கத்திலுள்ள சுகம் இவ்வளவென்று மனதினாலும் நினைக்கக்கூடாதே. அதை மறக்கும்படி செய்ய யார் தாம்; ஆயினும் மற்றவர்களைப்பார்க்கிலும், இவளை மேன்மையாய் வைத்துக்கொண்டிருப்பேன்" எனக் கேட்டு, சித்திரலேகை, ஊர்வசியைப்பார்த்து: "இனி பயப்படாமல் இங்கேயே அவர் சொன்னபடி கேட்டுக்கொண்டிரு; நான் போய்வருகிறேன்" என்று சொல்லி, அவளைப் பிரிந்துபோவதைக்குறித்து துக்கித்துக்கொண்டே மெள்ளமெள்ளத் தன்னிடம்போய்ச் சேர்ந்தாள். அப்போது புரூரவன், விதூஷகன் கண்டு களிக்கும்படி ஊர்வசியைக் கையிற் பிடித்துக்கொண்டு, "என் கண்ணே! நீ வருவதற்குமுன்னே எனக்கு நெருப்பாயிருந்தவைகளெல்லாம் இப்போது நீராயிருக்

கின்றன" என்றான். அதைக்கேட்டு, ஊர்வசி: "இது வரையில் இவ்வளவு வருந்தினதும் என்னாலேதானே, அதை மன்னிக்கவேண்டும்" என்று உபசாரம்சொல்ல, புரூரவன்: "அப்படியன்று, வெயிலில் வாடினவனுக்குத்தானே நிழலின் அருமை தெரியும். முன்போல் இப்போதும் இராப்பொழுது யுகமாய்முடியின் நான் அதிர்ஷ்டசாலிதான்" என்று சொல்லி அவளை அழைத்துக்கொண்டு தான் அந்தப்புரம் போய்ச் சேர்ந்தான்.

இப்படியிருக்கையில் ஒருநாள் ஊர்வசி தன் நாயகனும் தானுமாய் அழகான காடு மலை முதலிய விடங்களில் போய் விளையாடவேண்டுமென்று ஆசைகொண்டு தன் கருத்தை அவனுக்குத் தெரிவிக்க, அவனும் அவள் கருத்துக்கிசைந்து ராஜ்யத்தை மந்திரிகள்வசம் ஒப்புவித்து, அவளை இட்டுக்கொண்டு கைலாசமலைச் சாரலிலிருக்கின்ற கந்தமாதன பர்வதத்தினருகில் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது ஊர்வசி அவ்விடத்தில் ஓடுகிற மந்தாகினி நதியின் மணல்மேடுகளில் விளையாடிக்கொண்டிருந்த வித்தியாதர கன்னிகையினிடத்தில் தன் கணவன் ஆசைகொண்டதாக நினைத்து, உடனே கோபமூண்டு, அவன் எவ்வளவு நல்வார்த்தை சொல்லியும் கேளாமல் பரதமுனிவர் சாபத்தால் மதிமயங்கிப் பக்கத்திலிருந்த குமாரவனத்துட் பிரவேசிக்க, உடனே ஒரு முல்லைக்கொடியாக மாறினாள். ஏனெனில் சுப்பிரமணியக்கடவுள் தான் தவஞ்செய்யும்போது அதற்கு யாராவது இடையூறு செய்வார்களென்று

நினைத்து, 'இதற்குள் வருகிறவள் ஒரு கொடியாய்ப் போகக்கடவள்' என்று சபித்து, அந்த வனத்துக்குக் குமாரவனமென்று தன் பெயரையும் கொடுத்து அதனுள் தவஞ்செய்துகொண்டிருந்தார். அப்போது புரூரவ சக்கரவர்த்தி, அவள் போனவழி தெரியாமல் சீதையைப் பிரிந்து தவித்த ஸ்ரீராமனைப்பார்க்கிலும் எண்மடங்கு அதிகமாய் விசனமடைந்து, விலங்கு பறவை முதலிய பலவற்றையும் பார்த்துப் பேசிக்கொண்டு, பித்தன்போல் ஒன்றுந்தெரியாமல் அக்காடு முழுதிலும் அல்லாடிக்கொண்டிருந்தான். அப்போது மழைக்காலம் வந்தது; அக்காலத்தில் சுகமாயிருப்பவருக்கும் வருத்தமுண்டாமாகையால், இக்காதலியை நடுக்காட்டில் பறிகொடுத்துத் தவிக்கின்றவனுக்கு நேர்ந்த துன்பம் வாயினாற் சொல்லக்கூடுமோ? அவன் அப்படியே அந்தக் காடுமுழுதிலும் அவளைத் தேடிப்பார்த்தும் காணாமையால் மறுபடியும் அவள் மறைந்த விடத்திலேயே போய்ப் பார்ப்போமென்று அவ்விடத்திற்கு வந்தான். அங்கே ஒரு பெரிய பாறையின்கீழ் அதிக பளபளப்புள்ள மணியொன்றிருந்தது. அவன் அதைப் பார்த்து: 'இப்போ நாம் இதை எடுத்து என்னசெய்யப் போகிறோம்; ஊர்வசி யிருந்தால் பயன்படும்; அவளைத் தான் இழந்துபோனேனே; ஏன் வீணாய் இதன்மேல் கண்ணீரைப் பெருக்கி அழுக்காக்கவேண்டு'மென்று அதை எடாமல் ஒதுங்கி நிற்கையில், "குழந்தாய்! அதை எடுத்துக்கொள்; அதற்குச் சங்கமனீயம் என்று

பெயர். பார்வதிதேவியின்காற் செம்பஞ்சினின்றும் உண்டானது. தனக்கு வேண்டியது ஒன்று காணாமற் போனால் உடனே கொண்டுவந்து கூட்டும்" என்று வானத்தில் ஒரு சப்தம் கேட்டது. இவன், பரமேசுவரரே தயைசெய்தாரென்று நினைத்து, அதை எடுத்து அதனோடு கொஞ்சிக்கொண்டிருக்கையில், எதிரில் பூக்களையில்லாமல் நிரம்பத் தளிர்த்து அழகான ஒரு முல்லைக்கொடி தெரிந்தது. புரூரவனும் அதைக் கண்டு, இதென்ன ஊர்வசிபோலிருக்கின்றதே என்று அதனருகே சென்று அழுந்தக் கண்ணை மூடிக்கொண்டு, அதை ஊர்வசியாகவே தியானித்துக் கட்டி அணைத்துக்கொள்ள, உடனே அது ஊர்வசியாக மாறிப்போயிற்று. அப்போது, "இதென்ன கைக்கு ஊர்வசிபோலவே தட்டுப்படுகிறது; ஊர்வசிதானோ, நாம் இதுவரையில் இப்படி ஏமாந்துபோனது கணக்குவழக்கில்லையே, இப்போதும் கண்ணைத்திறந்தால் இது ஊர்வசியாயிராதோ என்னவோ" என்று பயந்துகொண்டே மெல்ல மெல்லக் கண்ணைத் திறந்து பார்த்தான். அவன் தன்னைப் பார்க்கவே அந்தத் துக்கம் பொறுக்கமாட்டாமல் ஊர்வசி கண்ணீர்விட்டழுதாள். அதுகண்டு புரூரவன்: "கண்ணே! இதுவரையில் உன்னைவிட்டுப் பிரிந்து நான் அனுபவித்த துக்கத்திற் களவுண்டோ, பிராணன் போனவனுக்கு உயிர் வந்ததுபோல நீ எனக்குக் கிடைத்தாய்" என்று சொல்ல, அவள், "ஆம், மகாராஜா பட்ட வருத்தங்களையெல்லாம் நான் ஞானதிருஷ்

டியால் பிரத்தியக்ஷமாகவே பார்த்துக்கொண்டிருந் தேன்" என்றாள். அதுகேட்டுப் புரூரவன்: "ஞான திருஷ்டியாலாவது பார்க்கவாவது, அதன் விவரம் எனக்குத் தெரியவில்லை. அதன் வரலாறு என்ன, எனக்குத் தெரியும்படி சொல்" என்று கேட்க, ஊர் வசி: "நாட்டியகுரு எனக்கிட்ட சாபத்தால் ஒன்றுந் தெரியாமல் இதனுள் பிரவேசித்தேன்; சுப்பிரமணிய சுவாமி இதில் ஒருவரும் வரக்கூடாதென்று கட்டளை யிட்டிருந்ததனால், இதற்குள் வந்தவுடன் நான் முல் லைக்கொடியாய்ப் போனேன்; ஆனால், அவர் சங்கமனீ யம் என்கிற மணி அகப்பட்டால்மாத்திரம் இந்தச் சாபம் நீங்கும் என்று சொல்லியிருந்தார். அதனால் நான் முல்லைக்கொடியாயிருந்தும் முன்னறிவு கெடா மலிருந்தேன். இதிருக்கட்டும், நாம் பட்டணத்தை விட்டு வந்து வெகுநாளாயிற்று; ஜனங்களெல்லாரும் துன்பப்படுவார்கள். ஆகையால் போவோம் வாரும்" என்றாள். அவனும் அதற்கு ஒப்புக்கொண்டதனால் இருவரும் மேகவாகனத்தின்மே லேறிக்கொண்டு தங் கள் பட்டணம் போய்ச் சேர்ந்தார்கள்.

பின்பு புரூரவ சக்கரவர்த்தி ஊர்வசியோடு கூடவே ராஜ்யமெல்லாம் செழித்திருக்கும்படி அரசாட்சி செய் துகொண்டிருக்கையில், ஊர்வசி கருத்தறிந்தபடியால், முன் தேவேந்திரன் சொன்னதை நினைத்து, நம் குழந் தை முகத்தை இந்த மகாராஜன் பார்த்தால் உடனே நாம் இவனைவிட்டுப் பிரியவேண்டுமே என்றெண்ணி,

அக்குழந்தையைப் பெற்றவுடன் சியவனமுனிவர் ஆச்சிரமத்துக்கு எடுத்துக்கொண்டுபோய், அங்கிருந்த சத்தியவதி என்பவளிடத்தில் ஒப்புவித்து அதற்குச் செய்யவேண்டிய ஜாதகரும நாமகரண முதலிய விதிகளெல்லாஞ் செய்து, சகல வித்தைகளையும் கற்பிக்கும்படி அவர்க்குச் சொல்லித் தன்னிடம் வந்து சேர்ந்தாள். அந்தக் கிழவியும் அக்குழந்தையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்துச் சியவன முனிவரைக்கொண்டு வேண்டியதெல்லாஞ் செய்விக்க, அவனும் சகல சாஸ்திரங்களிலும், தனுர் வித்தையிலும் அதிக சமர்த்தனுய் அவ்விடத்திலிருந்த ரிஷிப்பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டிருந்தான்.

ஒருநாள் அரசன்வீட்டில் திதியொன்று நேர்ந்தது; அதற்காக அவன் தன் தேவிமார்களோடுகூடப் பிரயாகைக்குப் போய் ஸ்நானஞ்செய்து வந்து சிங்காரித்துக்கொண் டிருக்கையில், ஊர்வசிக்குத் தலையில் முடிப்பதற்காக அந்தச் சங்கமனீய மணியை ஒரு தாசி எடுத்துக்கொண்டு வருவதைக் கண்டு, ஒரு கழுகு இது மாமிசமென்று நினைத்து, அதைத் தூக்கிக்கொண்டு வெகு தூரத்தில் பறந்தோடுகையில், சியவனமுனிவர் ஆச்சிரமத்தில் இருந்த இந்த ராஜகுமாரன் அதைப் பார்த்து: 'அர்த்தநாராசம்' என்கிற ஒரு பாணத்தால் அதை அடிக்க, உடனே அது சுருண்டு அந்த மணியை வாயில் கவ்விக்கொண்டு கீழே விழுந்தது. புரூரவ சக்கரவர்த்தியோ அந்த மணியைக் கழுகெடுத்துக்

கொண்டு போனதாய்க் கேள்விப்பட்டு, பாதி அலங்காரஞ் செய்துகொண்டதுங் கொள்ளாததுமாய்ச் சரேலென்று எழுந்திருந்து: "இப்போது அந்தப் பறவை எங்கே" என்று பராக்கிரமம் பேசிக்கொண்டே வெளியேவந்து அது ஆகாயத்தில் பறந்தோடுவதைக் கண்டு தன் வில்லை எடுத்துக்கொண்டுவரக் கட்டளையிட்டான். அதற்குள் அந்தப் பறவை பாணத்துக் கெட்டாத தூரத்திற்போய்ச் சேர்ந்தது. அதுகண்டு அந்தச் சக்கரவர்த்தி "வெகுதூரம் போய்விட்டது; இனிமேல் அதை அடிப்பது அசாத்தியம். தனுஸு வேண்டுவதில்லை" யென்று சொல்லித் தன் காவலாளனைப் பார்த்து, "இது எங்கேயும் ஓடிப்போகமாட்டாது; அஸ்தமித்தால் தன் கூடுவந்து சேரும்; அது எவ்விடத்திலேயோ அதைத் தேடிப்பார்த்து எப்படியாவது அந்த மணியைக் கொண்டுவர வேண்டுமென்று நான் சொன்னதாய்ப் பட்டணத்து விசாரணைக்காரனுக்குச் சொல்" என்று கட்டளையிட்டான். உடனே அவன் போய்ச் சொன்ன சங்கதியைக் கேட்டு அந்த விசாரணைக்காரன் நாலண்டையும் ஆட்களை விட்டுத் தேடும்படித் திட்டம்பண்ணினான். அப்படி அவர்கள் தேடிக்கொண்டு போகையில், ஒருவன் அந்தக் கழுகு பாணத்தால் அடிபட்டு அந்தப் பாணத்தோடுகூட விழுந்திருப்பதைக் கண்டு அந்தப் பாணத்தையும் மணியையும் எடுத்துக் கொண்டுவந்து காவற்காரன் கையில் கொடுக்க, அவன் அதைக் கொண்டோடி வந்து: "இந்

தப் பாணம்பட்டு மணியோடுகூடவே இந்தப் பறவை பூமியில் வீழ்ந்து கிடந்தது" என்று அரசனண்டை விண்ணப்பஞ்செய்ய, அவனும் அந்த மணியைச் சுத்தி பண்ணிப் பெட்டியில் வைக்கும்படித் திட்டஞ்செய்து, "அந்தப் பாணம் போட்டது யார்? உனக்குத் தெரியுமா" என்றான். அதற்கு அந்தக் காவலாளன்: "இதில் என்னவோ எழுதியிருக்கிறது; எனக் கின்னதென்று தெரியவில்லை; படித்துப்பார்த்தால் தெரியும்" என்று அரசன் கையில் கொடுத்துவிட்டுத் தன்வேலைக்குப் போய்ச் சேர்ந்தான். புரூரவனும் அதில் "புரூரவ சக்கரவர்த்திக்கு ஊர்வசியினிடத்தில் பிறந்த ஆயுஸ்ஸு என்பவனுடைய பாணமிது. பகைவர்களைப் பிராணனோடு கண்டால் உடனே கொன்றுவிடும்" என்று எழுதியிருந்ததைப் படித்துப் பார்த்துத் தனக்குக் குமாரன் பிறந்தவழி என்னவென்று சிந்தித்துக்கொண்டிருக்கையில், அவன் பக்கத்திலிருந்த விதூஷகன் "என்ன, அதைப் பார்த்து நீ ஆலோசிக்கிறாய்" என்று கேட்க, அவன் அதில் எழுதியிருந்ததை வாசித்துச் சொன்னான். அதுகேட்டு விதூஷகன்: "எது எப்படியானாலும் ஆகட்டும், பரமேசுவரன் அனுக்கிரகத்தால் உனக்குச் சந்தானமுண்டாயிற்றே" என்றான். "இதென்ன வேடிக்கையாயிருக்கிறது! நான் ஊர்வசியைவிட்டுப் பிரிந்த நாளெப்போ! அப்படியிருக்க, எனக்குத் தெரியாமல் பிள்ளை பிறந்ததென்றால் நான் என்ன சொல்லுவேன்; ஆனால் சிலநாள்மாத்திரம் கர்ப்பிணி

போலக் காணப்பட்டாள். அப்படித்தானிருக்கட்டும், அதை ஒளிக்கவேண்டுவதென்ன; அதன் விவரம் நமக்குச் செம்மையாய்த் தெரியவில்லை" என்று ஆலோசித்துக்கொண்டிருந்தான்.

இவர்கள் இப்படியிருக்க, அந்தச் சியவன முனிவர் ராஜகுமாரன் செய்த முனிவர்களுக்கு ஒவ்வாத நடத்தையைக் கேட்டு, இனி இவன் ரிஷிகளிருக்கிற இடத்தில் இருக்கத் தகுந்தவனன்று; பட்டணத்துக்கு இட்டுக்கொண்டுபோய் இவனைத் தாய்தந்தைகளிடத்தில் விட்டுவாவென்று சத்தியவதிக்குக் கட்டளையிட, அவளும் அந்த ராஜகுமாரனைக் கையும் வில்லுமாய் அழைத்துக்கொண்டு அரசனிடம் வந்தாள். அது கண்டு அந்தச் சக்கரவர்த்தி அவளைப் பூசித்துப் பின்பு வணங்கி, "இப்போ வந்த காரணம்" என்னவென்று கேட்க: அவள் "இந்தக் குமாரனை யாதுகாரணமோ ஊர்வசி குழந்தையிலேயே என்னிடத்தில் கொண்டு வந்து விட்டு, இவனுக்கு யாவையும் கற்பித்துக்கொடுத்துச் செம்மையாய்ப் போஷிக்கச்சொன்னாள். நானும் இதுவரையில் அப்படியே காப்பாற்றினேன். இப்போது இவன் ஆகாசத்தில் ஒரு பக்ஷி தற்செயலாய்ப் பறந்தோடுவதைப்பார்த்து அதை ஒரு பாணம்போட்டு அடித்தான். அந்தச் செய்தி சியவனருக்குத் தெரிந்து, இவனைத் தாய்தகப்பன்மார்களிடத்தில் சேர்ப்பித்துவா என்று சொன்னதனால், நான் இவனை அழைத்துக் கொண்டு வந்தேன். ஊர்வசியைப் பார்க்கவேண்டும்"

என்றாள். அவன் அப்படியே ஆகட்டுமென்று ஊர்வசியை வருவிக்க, அவள் வந்து, ராஜசிங்காசனத்தின் கீழ்ப்படியில் தன் குமாரன் உட்கார்ந்திருக்கக் கண்டு: "ஓஓ, சத்தியவதி நான் மறைத்துவைத்ததை வெளிப்படுத்தினாளே" என்று திகிலடைந்து, குமாரனைப் பார்த்த சந்தோஷத்தால் அதை மறந்து ராஜாவின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள். அப்போது அந்த ரிஷி பத்தினி ஊர்வசியைப் பார்த்து: "இந்தக் குழந்தை எல்லா வித்தைகளிலும் பண்டிதனாயினான். அரசாளும் படியான வயதும் வந்தது. ஆதலால் உங்களிடத்தில் கொண்டுவந்து சேர்த்தேன்; என் காரியங்களெல்லாம் கெட்டுப்போகின்றன. சீக்கிரமாய்ப் போகச் செலவு கொடுக்கவேண்டு"மென்று கேட்டுக்கொண்டு போகப் புறப்படும்போது, தன்னைப் பின்தொடர்ந்துவந்த குழந்தையைச் சமாதானம்பண்ணி நிறுத்திவிட்டு ஆச்சிரமம் போய்ச் சேர்ந்தாள்.

அப்போது அந்த ராஜாவானவன், தேவேந்திரனுக்கு ஜயந்தன் என்று ஒரு குமாரன் அவதரித்திருப்பதுபோல் எனக்கும் ஒருவன் உண்டானான் என்று தன் பிள்ளையைப் பார்த்து மகிழ்ந்துகொண்டிருக்கையில், ஊர்வசி, தேவேந்திரன் என்கிற சொல்லைக் கேட்டவுடன் தன் சாபத்தை நினைத்துக்கொண்டு கண்ணீர்விட்டழுதாள். அதுகண்டு புரூரவன், இதென்னவென்று மனங்கலங்கி ஊர்வசியைப் பார்த்து: "என் கண்ணே! நம்முடைய வம்சத்திற்கு வித்தாய் ஒருவ

னுண்டானனே என்று நான் ஆனந்தமாயிருக்க, நீ ஏன் அழுகிறாய்" என்று அவள் கண்ணீரைத் துடைத்துக் கேட்க: ஊர்வசி, "முன் நான் நாட்டியமாடுவதற்காகத் தேவலோகத்திற்குப் புறப்பட்டுப் போனேனே; அவ்விடத்தில் எனக்கு உன்னெண்ணமேதவிர வேறு நினைவே யில்லாமலிருந்ததனல், நாட்டியமாடினபோது வேறென்னவோ சொல்லவேண்டிய தருணத்தில் உன் பேரைச் சொன்னேன். அதுகேட்டு என் நாட்டியகுருவான பரதமுனிவர் கோபித்து, 'இனி ஒருநாளும் உனக்குத் தேவலோகத்தில் வாசம் நேராமல் போகக் கடவது' என்று சபிக்க, அதற்குத் தேவேந்திரன், 'நீ உன் இஷ்டப்படியே நமக்குத் தோழனை புரூரவ சக்கரவர்த்தியினிடத்திலே போய் அவரிடத்தில் ஒரு குழந்தையைப் பெற்று, அதை அவர் பார்க்கிறவரையில் அவரிடத்திலிருந்து பின்பு நம்மண்டை வர வேண்டும்' என்று எனக்கு உத்தரவு பண்ணினன். இப்போ அது நினைவுவந்தது. மகாராஜாவை விட்டுப் பிரிந்துபோகவேண்டுமே என்று விசனப்படுகிறேன். இதுதான் நான் அழுவதற்குக் காரணம்" என்றாள். அதுகேட்டு அந்த ராஜா பெருமூச்சுவிட்டு, "ஐயோ! மழை பெய்து குளிர்ந்துபோன மாத்தில் இடி விழுந்ததுபோல் பிள்ளையைக்கண்டு மனம் குளிர்ந்திருக்கிற எனக்கு என்னவந்து நேர்ந்தது" என்று விசனப்படுவதைக் கேட்டு, ஊர்வசி: "நமக்குக் குமாரன் அவதரித்தான்; இனி நாம் இங்கே இருக்கவேண்டுவதென்ன,

நம்மிடத்திற்குப் போவோமென்று நான் நினைக்கிற தாய்த் தோன்றுகிறதோ" என்று சொல்ல, புரூரவன்: "என்ன அப்படியிருக்குமா, உன் எஜமானன் கட்ட ளைப்படி நீ நடக்கவேண்டியதுதானே; நானும் உன் மகனை இந்த ராஜ்யத்தில் அபிஷேகம் பண்ணுவித்துத் தவசியாய்க் காட்டுக்குப் போகிறே" னென்று, உடனே அபிஷேகத்திற்கு வேண்டியவையெல்லாம் சேகரிக்கும் படி மந்திரிகளுக்குத் திட்டம்பண்ணினான். அப்போது அந்தச் சிறுவன் தன் தந்தையைப் பார்த்து "அதிக பலபராக்கிரமசாலிகளான அரசர்கள் ஆண்டுகொண் டிருந்த இந்த ராஜ்யத்தில் ஒன்றுந் தெரியாதவனை வைத்து விட்டுப்போவது நியாயமா" என்று சொல்ல, அரசன்: "அப்பா, அது அப்படியன்று, இவைகளெல் லாம் ஜாதியைப் பற்றிவந்த தொழிலேதவிர வயதால் வந்தவையன்று. சிங்கக்குட்டியும் யானையை அடிக் கிறது. பாம்புக்குட்டியின் விஷமும் எல்லா விஷத்தி னும் அதிகமாய் இருக்கிறது பார்" என்றான்.

அச்சமயத்தில் இந்தச் சங்கதி தேவேந்திரன் அறிந்து, புரூரவன் வனவாசியாய்ப் போவதை மறுக் கும்படி உடனே நாரதமுனிவரை அனுப்பிக்க, அவர் இந்தப் பூலோக சக்கரவர்த்தியினிடத்திற்கு வந்து ஆசனத்தில் உட்கார்ந்தபின், அந்தத் தம்பதிகள் இரு வரும் அவரைச் சேவிக்க, 'நீங்கள் ஒருநாளும் பிரியாம லிருக்கக் கடவீர்கள்' என்றார். அதுகேட்டு இவர்கள் மனமகிழ்ந்து தங்கள் தங்கள் ஆசனத்தில் உட்காந்தார்

கள். அப்போது நாரதபகவான் புரூரவனைப்பார்த்து: "நீர் காட்டுக்குப் போகத் துணிந்த சங்கதி தேவராஜன் அறிந்து; 'அந்த மகாபுருஷனால் நமக்கு அடிக்கடி ஒத்தாசை கிடைக்கவேண்டியதாயிருக்கிறது; அவர் காட்டுக்குப் போவது நலமன்று; எந்நாளும் ஊர்வசி யோடு கூடவே இருக்கலா'மென்று சொன்னார்" என்ன, அதுகேட்டு அவன் "அடியேன் அவர் எப்படி நியமித் தாலும் அப்படி நடக்கக் காத்துக்கொண்டிருக்கிறேன்" என்றான். அதைக் கேட்டவுடனே தேவகன்னிகை கள் அனைவரும் இந்திரன் கட்டளைப்படி இந்த ராஜ குமாரனை இளவரசுப்பட்டத்தில் அபிஷேகம் செய்வ தற்காக வேண்டிய புண்ணியதீர்த்தம் முதலியவைகளை எடுத்துக் கொண்டுவர, நாரதர் முதலியவர்களெல்லா ரும் அவனுக்கு அபிஷேகஞ் செய்துவிட்டுச் சந்தோஷ மாய்த் தங்கள் தங்களிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

புரூரவ சக்கரவர்த்தியும் இளவரசான தன் குமா ரனையே சகல ராஜகாரியங்களையும் பார்க்கும்படி ஏற் படுத்தி, தானும் அதிக குதூஹலமாய் ஊர்வசியோடு கூடவே வெகுநாள் வாழ்ந்திருந்தான்.

முற்றிற்று.